உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி கஅ], சித்தார்த்தி-ஹு பங்குனிமீ [பகுதி ரு.

Vol. XVIII. March—April 1920. No. 5.

## உவமைப்போலிவிளக்கம்.

(ககூஅ-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி வைதன்மியதிட்டாந்தப்போலிகள் வருமாறு.

எ. சாதனாவியாவிருத்தமாவது.-சாதனத்தால் (சாதன்மியத்தோடு) வேறுபாடில்லாதது; அதாவது சாதனத்தைத்தன்னகத்துடைய வைதன்மியதிட்டாந்தமென்றபடி. சாதனம்-ஏது. அவ்வியாவிருத்தம் - வேறுபாடில்லாதது. இதனைச் சிவஞானமுனிவர், "ஏதுவின்மையுடைத்தாகாதது" என்பர். ஏதுவின்மையுடைத்தாகாதது-ஏதுவையுடையதாயிருப்பது. இது மணிமேகலையுள் சாதனாவியாவிருத்தியென வழங்கப்படும். இதனை,

(29, 414) "சாதனாவியாவிருத்தி
யாவது.-சாத்தியதன்மமீண்டு,
சாதனதன்மமீளாதொழிதல்,
சத்தம்நித்தம்; அமூர்த்தத்தென்றால்.-
யாதொன்றயாதொன்றுநித்தமன்றஃது
அமூர்த்தமுமன்று; கன்மம்போல.
என்றால், வைதன்மியதிருட்டாந்த
மாகக்காட்டப்பட்டகன்மம்
அமூர்த்தமாய்நின்றே அநித்தியமாதலிற்
சாத்தியமானநித்தியமீண்டு,
சாதனமான அமூர்த்தம்மீளாது."

என்பதனுணர்க. இங்குக்காட்டிய வைதன்மிய திட்டாந்தப் பொருளாகிய கன்மத்துள் அமூர்த்தத்துவமாகிய சாதனம், இல்லாதொழியவேண்டுமென்னுமிலக்கணந்தவிர்ந்து, சாதன்மியத்துட் போலவுள்ளதாயிருத்தலால் இது, சாதனத்தால் (சாதன்மியத்தோடு) வேறுபாடில்லாமையாற் 'சாதனுவியாவிருத்தி' என்னும் திட்டாந்தப்போலியாயிற்று.

சாத்தியதன்மமீண்டு என்றது சாத்தியம் இல்லதாய் என்றபடி. சாதனதன்மமீளாதொழிதல் என்றது சாதனம் உளதாயிருத்தல் என்றவாறு.

இதனை, மறைஞானதேசிகர், மனது அநித்தியம் மூர்த்தமாதலினால்; என்கிற ஏதுசாத்தியங்களுக்கு "யாதொன்று அநித்தியமன்று அது மூர்த்தமுமன்று பரமாணுப்போல" எனத் திட்டாந்தங்கூறினால் அத்திட்டாந்தத்திலே சாதனமாயிருக்கிற மூர்த்தத்துவம் வியாவிருத்தமாகாமல் அதிலே இருக்கையினாலிது சாதநாவியாவிருத்தமாமெனவறிக. என்பதுபட விளக்கியவாற்றானுமறியலாம். அநித்தியம் - நாசமடையுமியல்புடையது. மூர்த்தம் - அளவுபட்டபரிமாணமுடையது. வியாவிருத்தமாதல் - வேறுபாடுற்றுநிற்றல்.

அ. சாத்தியாவியாவிருத்தம் என்பது.- சாத்தியத்தால் (சாதன்மியத்தோடு) வேறுபாடில்லாதது. அதாவது சாத்தியமுடையதனை வைதன்மிய திட்டாந்தமாகக்காட்டுவதென்றபடி.

இதனைச்சிவஞானமுனிவர் "சாத்தியமின்மையுடைத்தாகாதது" என்பர். சாத்தியமின்மையுடைத்தாகாதது - சாத்தியமுடைத்தாயிருப்பது.

இது மணிமேகலையுள், சாத்தியாவியாவிருத்தி என வழங்கப்படும். அது வருமாறு.—

(29, 404) "சாத்தியாவியாவிருத்தி

யாவது.—சாதனதன்மமீண்டு,

சாத்தியதன்மமீளாதொழிதல்.

சத்தம்நித்தம்; அமூர்த்தத்தென்றால்;

யாதொன்றுயாதொன்றநித்தமுமன்று; அது

வமூர்த்தமுமன்று; பரமாணுப்போல்எனின்;

அப்படித்திட்டாந்தமாகக்காட்டப்-
பட்டபரமாணுநித்தமாய்,மூர்த்த-
மாதலிற்,சாதனவமூர்த்தம் மீண்டு,
சாத்தியநித்தமீளாதொழிதல்." என்பதாம்.

இங்குக்காட்டிய வைதன்மியதிட்டாந்தம் 'பரமாணு'; அதன்கட் காட்டவேண்டிய சாத்தியாபாவம் அநித்தியத்துவம். அஃதப்பரமாணுவிலில்லாது சாத்தியமாகிய நித்தியத்துவமேயுண்மையால் இது சாத்தியத்தால் சாதன்மியத்தின் வேறுபாடில்லதாயிற்று. அதனாலிது சாத்தியாவியாவிருத்தியெனப்பட்டது. சாதனதன்மம் - சாதனமாகியதன்மம்; அதாவது ஏது. மீண்டு - இல்லதாய். மீளாதொழிதல் - உளதாதல்.

இது மறைஞானதேசிகருரையுள், மனது அநித்தியம்; மூர்த்தமாதலால்; என்ற ஏது சாத்தியங்களுக்கு கன்மம்போல, என்கிற வைதன்மியதிட்டாந்தத்திலே சாத்தியமாயிருக்கிற அநித்தியத்துவம் வியாவிருத்தமாகாமல் அதிலே இருக்கையினால் (இது சாத்தியாவியாவிருத்தமாயிற்று.) என்பதுபடவிளக்கப்பட்டது.

(அநித்தியத்துவம் - அழிவுடைமை. வியாவிருத்தமாகாமல் - வேறுபாடுற்றுநில்லாமல். அதிலே - கன்மத்திலே.)

௩. உபயாவியாவிருத்தம் என்றது அதிகாரப்பட்டுநின்ற சாதன சாத்தியங்களிரண்டாலும் (சாதன்மியத்தோடு) வேற்றுமையில்லாததொன்றை வைதன்மியதிட்டாந்தமாகக் காட்டுவது.

இதனைச் சிவஞானமுனிவர் "இரண்டின்மையுமுடைத்தாகாதது" என்பர். இரண்டின்மையுமுடைத்தாகாதது - இரண்டுண்மையுமுடைத்தாயிருப்பது. இரண்டு - சாதனசாத்தியங்கள்.

இது மணிமேகலையுள் 'உண்மையின் உபயாவியாவிருத்தி' என வழங்கப்பட்டது. (அதாவது திட்டாந்தப்பொருளுள்ளதாய் அது சாதன சாத்தியங்களையுடையதாய்ச் சாதன்மியத்தின் வேறுபாடு தோன்றாதிருப்பதொன்றை வைதன்மியதிட்டாந்தமாகக்காட்டுதலென்றபடி, அது வருமாறு.—'

(29, 430) ....................“உண்மையின்உபயா
வியாவிருத்தி.-உள்ளபொருட்கட்
சாத்தியசாதனமீளாதபடி
வைதன்மியதிருட்டாந்தங்காட்டல்.
சத்தம்நித்தம்அமூர்த்தமாதலின்
என்றூற்கு,யாதொனறுயாதொன்றுநித்தமன்று.
அமூர்த்தமுமன்று. ஆகாசம்போலென்றால்,
வைதன்மியதிருட்டாந்தமாகக்—
காட்டப்பட்டவாகாசம்பொரு-
ளென்பாற்கு ஆகாசம்நித்தமும், அமூர்த்தமும்
ஆதலாற்,சாத்தியநித்தமும்,சாதனமா
வுள்ளவமூர்த்தமுமிரண்டுமீண்டில” என்பதாம்.

இங்கு நித்தமாதல் சாத்தியம். அமூர்த்தமாதல் சாதனம். இவ்விரண்டும் வைதன்மியதிட்டாந்தமாகக்காட்டப்பட்ட வாகாயத்தில் இல்லனவாகாது உள்ளனவாயிருத்தலால் எதிர்மறைமுகத்தால் மறித்துக்கூறப்படாமைபற்றி இது திட்டாந்தப்போலியாயிற்று.

இதனை, மறைஞானதேசிகருரையுள், மனது அநித்தியம்; மூர்த்தமாதலினால் என்றவதுசாத்தியங்களுக்கு யாது அநித்தியமன்று அது மூர்த்தமன்று குடம்போல என வைதன்மியதிட்டாந்தங் காட்டினால், அங்ஙனங்காட்டிய வைதன்மிய திட்டாந்தமாகிய குடத்தில் இருக்கவேண்டிய நித்தியத்தன்மையும், அமூர்த்தத்தன்மையுமாகிய சாத்தியசாதனங்களிரண்டுமுண்மையால் அவ்விரண்டானும் சாதன்மியத்தோடு வேறுபாடின்மைபற்றி இது உபயாவியாவிருத்தமாமென்பதுபடக் குறிப்பிட்டிருக்கிறவுதாரணத்தானுமுய்த்துணர்ந்துகொள்க.

௧0. ஆசிரயவிகீனம்:—இது சாதன்மிய திட்டாந்தப்போலியுள் ஆசிரயகீனம் என வழங்கப்பட்டபொருளில் வைதன்மிய வேறுபாடுதோன்ற ‘ஆசிரயவிகீனம்’ என வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கு ஆசிரயம் என்றது சாத்தியசாதன தர்மாபாவங்களாகிய விசேடணங்களுக்குப் பற்றுக்கோடாயிருத்தற்குரிய வைதன்மிய திட்டாந்தப்பொருள் என்று கொள்ளத்தக்கது. விகீனம் இல்லாதொழிவது.

இது மணிமேகலையுள் இன்மையினுபயாசியாவிருத்தியெனக் கூறப்பட்டது. இதனை

(29,442) "இன்மையினுபயாசியாவிருத்தியாவது.-

சத்தம்அநித்தம் மூர்த்தமாதலால்
என்றவிடத்து,யாதொன்றுயாதொன்று
அநித்தமூர்த்தமுமன்று ஆகாசம்போலெனை
வைதன்மியதிருட்டாந்தங்காட்டில்,
ஆகாசமபொருளல்லவென்பானுக்கு
ஆகாசந்தானேயுண்மையின்மையினற்,
சாத்தியவநித்தமும்சாதனவமூர்த்தமும்
மீட்சியுமீளாமையுமில்லையாகும்"

என்பதனுனறிக. இங்கு அநித்தமாதல்சாத்தியம்; மூர்த்தமாதல் சாதனம். இவ்விரண்டனதின்மைக்கும் ஆசிரயமாகக்காட்டப்படும் வெதிரேகதிட்டாந்தம் ஆகாயம். இது ஆகாயமென வொருபொரு ளில்லையென்னும் புத்தசாருவாகருக்கு வினைமாய் அந்நுவயவியாத் திக்கும் வெதிரேகவியாத்திக்கும் இடனுகாது திட்டாந்தலக்ஷணம் சிதைதலாலிது திட்டாந்தப்போலியாயிற்று.

இதனைச்சிவஞானமுனிவர், "சொரூபமில்லதூஉம," 'சொரூப முண்மைபானுக்குடம்பாடாகாததூஉம்' என இருகூறுபடுத்துப்பதி னென்கு பதினைந்தாவதாகவைத்தெண்ணினர்.

அவற்றுட் (1) சொரூபமில்லதற்கு உதாரணம்,—"குடம் அழி தற்பாலது; தோற்றமுடைமையால்." என்ற சாத்திய சாதனங்க ளுக்கு, யாதுயாது அழிதற்பாலதன்று அது அது தோற்றமுடைய தன்று; முயற்கொம்புபோல என்பதாம். இங்கு வியாத்திவாசகத் தாற்கூறிய அழிதற்பாலதல்லாமையும் தோற்றமுடையதல்லாமையு மாகிய சாத்தியசாதனுபாவதர்மங்களுக்குப் பற்றுக்கோடாகக்கூறிய திட்டாந்தப்பொருள் முயற்கோடு; அதன் சொரூபமேயுலகத்தின் மையால் இது சொரூபமில்லதாயிற்று.

(2) 'சொரூபமின்மைபானுக்குடம்பாடாகாதது' என்பதற்கு உதாரணம்.—வாயு காட்சிப்பொருள்; பரிசமுடைமையால் என்னும் சாத்தியசாதனங்களுக்கு யாதுயாது காட்சிப்பொருள் அன்று; அது

அது பரிசமுடையதன்று; ஆகாசம்போல. எனப்புத்தசாருவாகரை நோக்கிக்கூறுவதாம். இங்கு வைதன்மியதிட்டாந்தமாகக் கூறப்பட்ட வாகாயசொருபமேயவர்க்குடம்பாடின்மையாலிது சொருபமுண்மை பரனுக்குடம்பாடாகாதெனப்பட்டது. இதன்கண்ணும் சொருபமில்லதன்கட்போலவே வியாத்தியுணர்வுதோன்றாமையாலிதுவும் இட்டாந்தப்போலியாயிற்று. இங்கு ஆகாயத்தின் சொருபமாவது சத்தகுணமுடையதாய், விபுவாய், ஒன்பது திரவியத்துளொன்றாய்ச் சித்தித்திருப்பது. புத்தசாருவாக மதத்தில் ஆகாயஸ்வரூபம் இவ்வாறு சித்திக்காமையால் அவர்க்கிது உடம்பாடன்றென்றறிக.

இதற்கு, மறைஞானதேசிகருரையுள், 'ஆசிரயவிகினமாவது- என்று தொடங்கி மனது அநித்தியம் மூர்த்தமாதலால் என்னும் ஏது சாத்தியங்களுக்கு "ஆகாயப்பூப்போல்" எனத்திட்டாந்தங்காட்டப் பட்டது. இங்கும் சாத்திய சாதனபாவங்களாகிய அநித்தியமூர்த்தா பாவதர்மங்களுக்கு ஆசிரயமாகக்காட்டப்பட்ட ஆகாயப்பூவுக்குச் சொருபமேயில்லாமையாலிதுவும் ஆசிரயவிகினமாமென விளக்கப் பட்டவாறு காண்க.

கக. இனிப்பதினொன்றாவதாக எண்ணப்பட்ட வியாவிருத்திய பிதாநமென்ற பெயர் பிழைபட்டது. அது வியாத்தியநபிதானம் என்றிருக்கவேண்டும். இதன்பொருள் வியாத்திவாசகமின்மையை யுடையது என விரியும். அவ்வியாத்தியபிதானமென்பது சாதன்மிய மும், இது வைதன்மியமுமாகிய வேறுபாடுதோன்ற 'வியாத்தியநபி தாநம்' என வேறுபெயரிடப்பட்டது. இங்கு வியாத்தியென்றது வெதிரேகவியாத்தியெனக்கொள்க. அநபிதான்-அபிதான (வாசக) சூனியமாதலால், வியாத்தியநபிதானமென்பதற்கு வெதிரேகவியாத்தி வாசக சூனியமான திட்டாந்தமென்பது பொருளாம்.

இது மணிமேகலையில் 'அவ்வெதிரேகம்' என வழங்கப்பட்டது. 'அவ்வெதிரேகம்' என்பதும் வெதிரேகவியாத்திவாசக சூனியமாயுள் ளது என்னும் பெயருடையதாய் வியாத்தியநபிதானம் என்பதோடு பரியாயமாதல் காண்க. வெதிரேகம்—அந்வயவியாத்தியின் மறு தலைப்பட்ட எதிர்மறை வியாத்திவாசகம்; அதனையில்லாதது-அவ் வெதிரேகமெனப்பட்டது. இதனிலக்கண முதலியன மணிமேகலை யுட் பின்வருமாறு கூறப்படும். அவை வருமாறு.—

அவ்வெதிரேகமாவது.-சாத்திய
மில்லாவிடத்திலேதுவுமின்மை-
சொல்லாதேவிடுதலாகுஞ். சத்தம்
நித்தம்;பண்ணப்படாமையாலென்றால்;
யாதொன்றுயாதொன்றுநித்தமன்று
பண்ணப்படுவதல்லாததுவு
மன்;றெனுமிவ்வெதிரேகந்தெரியச்
சொல்லாது,குடத்தின்கண்ணேபண்ணப்
படுதலும்,அநித்தமுமண்டேமாதலான்
என்னின்,வெதிரேகந்தெரியாது. என்பதாம்.

இதில் நித்தமாதல்சாத்தியம்.. பண்ணப்படாமை சாதனம். முறையே இவ்விரண்டனதின்மையும், தொடர்புடையவெனப்புலப்படுப்பதான வியதிரேகவியாத்திவாசகங்கூறாமையால், திட்டாந்தத்தில் வியதிரேக வியாத்தியுடைமை தோன்றாமைபற்றி இது திட்டாந்தப்போலியா யிற்று என்பது ஒருசாரார் கொள்கை.

இது மறைஞானதேசிகருரையில், ஆகாயம்போல என்ற உதார ணத்தாற் குறிக்கப்பட்டது. அவ்வுரைவாக்கியங்கள் குறைந்து பிழைபட்டிருத்தலால் அதன்பொருள் ஆராய்ந்தறிதற்பாலது. அதா வது மனது அநித்தியம் மூர்த்தமாதலினால் என முற்கூறிய ஏதுசாத் தியங்களுக்கு, யாதுயாது அநித்தமன்று; அதுஅது மூர்த்தமன்று; என்னும் வெதிரேகவியாத்தி வாசகங்கூறாது, ஆகாயம்போல என்ற திட்டாந்தத்தை மட்டுங்கூறில், வியாத்தியுணர்வுண்டாகாமையாலிது திட்டாந்தப்போலியாமெனவறிக என்பதாம். இருக்கும் உரைவாக் கியத்தில் "வியாத்தியனபிதானம்" எனற்பாலது வியாவிருத்தியபிதா னன் என்றும், "ஆகாயம்" எனற்பாலது ஆச்ரயம் என்றும், "உண் டாகாமையா" லெனற்பாலது உண்டாகையாலென்றும் பிழைபட் டுள்ளன.

சிவஞானமுனிவர் 'இத்திட்டாந்தப்போலியையும், சாதன் மியத்தின் அவ்வியாத்திாபிதானத்தோடொப்ப வியாத்தியுணர்வு, சொல்லில்வழித்தோன்றும் 'குறிப்பாற் பெறப்படுமெனக்கொண்டு, போலிவகையுட்சேராதொழித்து, இதற்கோசச் சொரூபமுள்ள

தோன்றையே, பரனுக்கு உடம்பாடின்மைபற்றி, "சொரூபமுண்மைபரனுக்குடம்பாடாகாதது" எனப்பெயர் கொடுத்து, ஆசிரயஹீனத்தின் வேறுபடுத்தி ஒருதிட்டாந்தப்போலியாக்கினர்.

இதற்கு உதாரணம் மனது அநித்தியம் மூர்த்தமாதலால் என்ற ஏதுசாத்தியங்களுக்கு யாதுயாது அநித்தியமன்று அதுஅது மூர்த்தமன்று ஆகாயம்போல எனப்புத்தசாருவாகரைநோக்கி வைதன்மியதிட்டாந்தங்காட்டுதலாம். இங்குக்கூறிய சாத்தியசாதன தர்மாபாவங்களுக்கு ஆசிரயமாகக்காட்டிய ஆகாயசொரூபம். அவர்களுக்கு உடம்பாடாகாமையால், இது "சொரூபமுண்மைபரனுக்குடம்பாடாகாதது" எனப்பட்டது. இதுவும் மறைஞானதேசிகர்க்கு ஆசிரயஹீனத்துளடங்கும்

௯. விபரீதவியாத்திப்பிதாநமாவது-வெதிரேகவியாத்தி வாசகத்திற் சாத்திய சாதனபாவங்களை முன்பின்னாகமாற்றிக்கூறித்திட்டாந்தங்காட்டுதலாம். அதாவது மலை நெருப்புடைத்து; புகையுடைமையால்; என்னுமிடத்து, யாதுயாது நெருப்பில்லாதது அதுஅது புகையில்லாதது எனச்சாத்தியாபாவம் முன்னும் சாதனபாவம் பின்னுமாக வெதிரேகவியாத்தி கூறவேண்டுமுறையேகூறாது, யாதுயாது புகையில்லாதது அதுஅது நெருப்பில்லாதது மடுப்போல எனச்சாதனபாவம் முன்னும் சாத்தியாபாவம் பின்னுமாகத்தட்டுமாறித்திட்டாந்தம் காட்டுவதாம். இப்படிக்காட்டினால், புகையில்லாத செந்தணலில் நெருப்பிருக்கக்கண்டுழி வியாத்தியுணர்வுதோன்றாமையாலிதுவும் திட்டாந்தப்போலியாமென்பது கருத்து.

இது மணிமேகலையுள் விபரீதவெதிரேகமென வழங்கப்படும். இதனை.—

(29,461) விபரீதவெதிரேகமாவது.—
பிரிவைத்தலைதடுமாறச்சொல்லுதல்,
சத்தம்நித்தம்மூர்த்தமாதலின்
என்றால்,என்றுநின்றவிடத்து.
யாதோரிடத்துநித்தமுமில்லையவ்
விடத்துமூர்த்தமுமில்லையெனாதே,
யாதோரிடத்துமூர்த்தமுமில்லையவ்
விடத்துநித்தமுமில்லையென்றால்
வெதிரேகமாறுகொள்ளுமெனக்கொள்க,

என்பதனுணர்க. இங்கு, பிரிவென்றது சாத்தியசாதனங்களின் பிரிவாகிய அவற்றின் அபாவங்களாம். தலைதடுமாறல்-தட்டுமாறல், வியாத்திவாசகத்திற்காட்டியநித்தம், அநித்தம் என்பன அவ்வத்தன்மைகளை யுணர்த்திநின்றன. வெதிரேகம் மாறுகொள்ளுமென்றது-வெதிரேகவியாத்தி தோன்றாது விரோதிக்குமென்றபடி. இது மறைஞானதேசிகருரையுள், விபரீதவியாத்தியபிதானமாவது, (மனது அநித்தியம்; மூர்த்தமாதலினால் என்ற) இந்த ஏதுசாத்தியங்களுக்கே விபரீதவியாத்தியிலே-(யாதுயாது மூர்த்தமன்று அதுஅது அநித்தமன்று) ஆகாசம்போல என்கிற திட்டாந்தம் பொருந்துதலால் (அது விபரீதவியாத்தியபிதானமெனவறிக.) எனக்குறிக்கப்பட்டது. அதாவது மனது அநித்தியம் மூர்த்தமாதலினால் என்ற ஏதுசாத்தியங்களுக்கு வெதிரேகவியாத்தி சொல்லுமிடத்து யாதுயாது அநித்தமன்று (நித்தியம்) அதுஅது மூர்த்தமன்று ஆகாயம்போல எனச்சாத்தியாபாவம் முன்னும், சாதனாபாவம் பின்னுமாக வியாப்பியவியாபகங்களை முறையேகூறாது, யாதுயாது மூர்த்தமன்று அதுஅது அநித்தமன்று, என வியாபகமாகிய சாதனாபாவம் முன்னும், வியாப்பியமாகிய சாத்தியாபாவம் பின்னுமாகவைத்துமுறைபிறழ (வெதிரேகமாறுகொள்ள)க் கூறி, ஆகாயம்போல என்று திட்டாந்தங்காட்டினால் இது விபரீதவெதிரேகமாமென்பது குறிப்பு.

இத்திட்டாந்தப்போலியையும், சிவஞானமுனிவர் வியாத்திவாசகத்தை முறைபிறழக்கூறலாகிய உக்திதோஷமுடையதாகக் கொள்ளாது பொருட்குற்றமுடையதாமாது செயற்கையானுகிய வியாத்தியுடையதென்றார். அதாவது. செயற்கையுடைய ஏதுவைக்கொண்டு வியாத்திகாட்டும் திட்டாந்தம் என்பதாம்.

உதாரணம்.—குடம்புருடனாற்பண்ணைப்படுவது; அழிவுடையதாதலால் என்னும் ஏதுசாத்தியங்களுக்கு வெதிரேகத்தில், யாதுயாது புருடனாற்பண்ணப்படாதது; அதுஅது அழிவுடையதன்று; ஆகாசம்போல. எனத்திட்டாந்தம் காட்டுதலாம். இங்ஙனம்காட்டில் புருடனாற்பண்ணைப்படாத மின் முதலியவற்றில் அழிவுபாடுண்மையால் இயற்கையான் வியாத்தியின்றாம். காரியப்பாடின்மை ஆகிய செயற்கைகோடேடியவிடத்து பாதியாத காரியப்பாடில்லதாப்புருடனாற்

பண்ணப்படாதது அது அது அழிவுடையதன்று என வெதிரேக வியாத்தியுடைமையால் இது வெதிரேகவியாத்தி செய்கையா னுடைய தெனப்படுமாறு காண்க. இவ்வுதாரணத்தின் வெதிரேகவியாத்தி வாசகத்தையே விபரீதப்படக்கூறின், யாதுயாது அழிவுடையதன்று அது அது புருடனாற்பண்ணப்படுவதன்று என வியாத்தியுடையதாய் விபரீதவியாத்தியபிதானமாமாறு காண்க. இதனால் விபரீதவியாத்திய பிதானங்களும் வியாத்தி செயற்கையானுடையனவும் பொருளால் வேறில்லையாமாறு காண்க.

இவ்வனம் மணிமேகலையுட்கூறிய திட்டாந்தப்போலி வகையெல் லாம் அநுமான விளக்கத்துள்ளும் விளங்கக்காணலாம்.

இனி சந்திக்தவகை ஆறனுள் முறையே கக, கஉ, கரு-ஆமிலக் கங்களிடப்பெற்ற சந்திக்தசாத்தியம், சந்திக்தசாதனம், சந்திக்தோ பயம் என்பன தைமாதச்செந்தமிழ்ப்பகுதியிற் சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்காட்டிய விளக்கத்தால் நன்குவிளங்குதலால் அவை இங்கு விடப்பட்டன.

கச. சந்திக்தவாசிரயமாவது - உள்ளதென்று தெளியப்படாது ஐயப்பாட்டிற்கிலக்காயிருப்பதொன்றைத் திட்டாந்தமாகக் காட்டு வது. சந்திக்தம்-ஐயப்பாடுடையது. இங்கு ஆசிரயமென்றது முன்பு அதிகாரப்பட்டுநின்ற சாத்தியசாதனங்களும், இனி அதிகரிக்கப் படுவனவாய்ப்பின்னிற்கும் சாத்தியசாதனபாவங்களுமாகிய தன்மங் களுக்கு ஆச்சிரயமாகிய திட்டாந்தப்பொருளெனக் கொள்ளத் தக்கது. இதற்கு உதாரணம்-அசித்தன் இமையாநாட்டமுடையவன்; தேவனாதலால்; எவன் எவன் தேவனோ அவனவன் இமையாநாட்ட முடையவன்; சயந்தன்மகன்போலும். என்பதாம். இதில் திட்டாந்த மாகக்காட்டப்பட்ட சயந்தன்மகன் என்ற சாத்தியசாதனதர்மாச் சிரயமான திட்டாந்தப்பொருள் உண்டோ இல்லையோ? வென ஐயப் பாட்டிற்கிலக்காயிருத்தலால் இது சந்திக்தவாசிரயமாமெனக்கொள்க. (இது சாதன்மியம்.)

இனி வைதன்மிய உதாரணம் வருமாறு. இந்திரன் தேவனா வன்; தேவலோகத்திருத்தலால்; எவனெவன் தேவனில்லை அவ னவன் தேவலோகத்திருப்பவனல்லன், சுக்கிரீவன்மகன்போலு

மென்பதாம். இங்குக்காட்டப்பட்ட சுக்கிரீவன்மகன் என்னும் (சாத்தியசாதனதர்மாபாவாச்சிரயமான) திட்டாந்தம் உண்டோ? இல்லையோ? வென ஐயப்பாட்டிற்கிலக்காயிருத்தலால் இது வைதன்மியத்தில் வந்த சந்தித்த வாச்சிரயமெனக்கொள்க.

௧௭. சந்தித்தசாத்தியாவியாவிருத்தமாவது-சாத்தியத்தின் ஐயப்பாடுடையதொன்றை வெதிரேகதிட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம்.—மலைநெருப்புடைத்து; புகையுடைமையால் என்னும் அநுமானத்தில், யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது மழுப்போல என்பதாம். இங்குக்காட்டிய வைதன்மிய திட்டாந்தமாகிய மழுவில், சாத்தியமாகியநெருப்பு உண்டோ? இல்லையோ? என ஐயப்பாடுடைய பரனுக்கு இது சந்தித்தசாத்தியாவியாவிருத்தமாமெனக்கொள்க. இப்பெயர்ப்பொருள்.—சந்தித்தசாத்தியத்தால் (சாத்தியசந்தேகத்தால்) வேறுபாடு (சாத்தியாபாவநிச்சயம்) தோன்றாதது என்பதாம். வைதன்மியதிட்டாந்தத்திலிருக்கவேண்டிய சாத்தியாபாவநிச்சயமில்லாமையால் இது திட்டாந்தப்போலியாயிற்று. இனிவரும் 'சந்தித்த சாதனாவியாவிருத்தம்' என்பதற்கும் இவ்வாறுபொருளுரைத்துக்கொள்க.

௧௮. சந்தித்த சாதனாவியாவிருத்தமாவது சாதனத்தின் ஐயப்பாடுடையதொன்றை வைதன்மியதிட்டாந்தமாகக்காட்டுவது. உதாரணம்.—பனை புல்வகையுட்சேர்ந்தது புறக்காழுடைமையால், என்னும் அநுமானத்தில் யாது யாது புல்வகையுட்சேராதது அது அது புறக்காழுடையதன்று. முருங்கைபோலும் என்பதாம். இங்கு வைதன்மிய திட்டாந்தமாகக்காட்டப்பட்ட முருங்கை புறக்காழுடையதோ அன்றோ என்று ஐயுறுநிற்கும் பரனுக்குச் சாதனம் சந்தித்தமாதலால் அவனுக்கு இது சந்தித்தசாதனாவியாவிருத்தமாமெனக்கொள்க.

இங்குக்காட்டிய சந்தித்தவகை ஆறனுள், முதல்நின்றமூன்றும் விகலமென வழங்கற்குரிய சாதன்மியப்போலிவகையாகவும், இறுதிநின்ற இரண்டும் அவ்வியாவிருத்தமென வழங்கற்குரிய வைதன்மியப்போலிவகையாகவும், இடைநின்ற சந்தித்த ஆசிரயம் ஒன்றும் சாதன்மிய வைதன்மியங்களிரண்டற்கும் இடையே பொதுமையிற்கூறியதாகவும் ஏற்புழிக்கோடலாற்கொள்க.

இங்குச்சாதன்மியவைதன்மியங்களுக்குப் பொதுப்படக்கூறிய சந்திக்த வாச்சிரயம்போலவே ஆசிரயஸித்தத்தையும் சாதன்மிய வைதன்மியங்களுக்குப் பொதுவாகவைத்து, ஆசிரயவிசேனத்தை யொழிப்பினுமிழுக்காது.

ஆயின் திட்டாந்தப்போலி பதினெட்டு என்னும் எண்ணுள் ஒன்று குறைபடும். அதற்கீடாக, சந்திக்தவகையிற்கூறுதலிட்ட உபயாவியாவிருத்தமொன்றுகூட்டிப் பதினெட்டாக்கிக்கொள்ளலும் கூடும். அங்ஙனம்கொள்ளுங்கால் அதன் விவரணமும் பின்வருமாறு காண்க.

௧௮. சந்திக்தோபயாவியாவிருத்தமாவது சாத்தியசாதனங்க ளிரண்டினும் ஐயப்பாட்டிற் கிலக்காயிருப்பதொன்றை வைதன்மிய திட்டாந்தமாகக்கூறுவது.

உதாரணம்.—"காற்று அளவுடையது; செலவுடையதாதலால்." என்னும் அநுமானத்தில், ("யாதுயாது செலவுடையது அது அது அளவுடையது அம்புபோலும்." எனச்சாதன்மிய திட்டாந்தம் காட்டியபின்பு) யாது யாது அளவுடையதன்று? அது அது செல வுடையதன்று; சத்தம்போல என (சத்தத்தின் இயல்பறியாதபர னுக்கு) வைதன்மிய திட்டாந்தங்காட்டுதலாம். இங்குக்காட்டிய வைதன்மியதிட்டாந்தம் சத்தம்; அது, சிறிது, பெரிது, குறிது, நெடிது என வழங்கப்படுதலால் அளவுடையதோ? குணமாதலால், அள வென்னும் பிறிதொருகுணமில்லாததோ? என்று துணிபொருளையப் பாடும், அலைபோற்சூழ்ந்து சேய்மைக்கண்ணும் புடைபெயர்தலால் செலவுடையதோ? குணமாதலாற்செலவில்லாததோ? என ஏதுவினையப் பாடும் உடையபரனுக்குச் சத்தத்தின்கட் சாத்தியசாதனபாவ நிச்சய மான வேறுபாடுதோன்றாமைபற்றி இது சந்திக்தோபயாவியாவிருத்த மாமெனக்கொள்க. இன்னும் இவ்வாறே ஒவ்வோருவமைப்போலிக் கும் வெவ்வேறுதாரணங்களும் உய்த்துணர்ந்துரைத்துக்கொள்க. சிவாக்கிரயோகிகளைப்பிற்கண்டவகையும் ஒருவாறுகாட்டப்படும்.

(தொடரும்.)

பத்திராதிபர்.

---

# ஏதுப்போலி.

ஏதுப்போலியாவது தருக்கநூல்களிற் சொல்லப்பட்ட பிரமாணங்களுள் அநுமானப் பிரமாணத்தாற் பெறப்படும் அநுமிதியறிவைத் தடைசெய்யுங் குற்றங்களுள் ஒன்று. அஃது ஏதுவுக்குரிய இலக்கணத்திலே குறைவுடையதாயிருந்தும் ஏதுப்போலத் தோன்றுதலால் ஏதுப்போலி என்னும் பெயருடையதாயிற்று. ஏதுவாவது இன், ஆன் என்னும் வேற்றுமையுருபுகளுள் ஒன்றீறாக நின்று பொருளைத் துணிவிக்குங் குறியை அறிவிப்பது. போலி போல்வது. இதனை வடநூலார் ஏத்துவாபாசம் என்பர். ஏது+ஆபாசம்=ஏத்துவாபாசம். ஆபாசம்—பிரதிபிம்பம், நிழல்.

இந்த ஏதுப்போலியும் அநைகாந்திகம், விருத்தம், சற்பிரதிபக்கம், அசித்தம், பாதிதம் என ஐவகைப்படும். இவற்றுள் அநைகாந்திகம் சாதாரணம், அசாதாரணம், அநுபசங்காரி என மூவகைப்படும். அசித்தமும் ஆசிரயாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தம் என மூவகைப்படும் என இரண்டுக்கும் வகைகாட்டி மற்றையன ஒவ்வொன்று எனத் தருக்கசங்கிரகம், தருக்ககௌமுதி முதலிய நூல்கள் கூறும். சிவஞானசித்தியோ வகையால் மூன்று என்றும், விரியால் இருபத்தொன்று என்றும் கூறும். "ஏதுப்போலி யொருமூன்றாய் வேண்டுமெழுமூன்றாகும்" என்பது சிவஞானசித்தி. சித்தியுரைகாரருள்ளே மறைஞானதேசிகர் அநைகாந்திகம் ஏழு என்றும், விருத்தம் இரண்டு என்றும், அசித்தம் பன்னிரண்டு என்றுங் கூறி அவைகளையுங் காட்டினர். மற்றைய உரைகாரரும் பல்வற்றிலே முரணுவர். மறைஞானதேசிகர் கூறிய விருத்தமும் அசித்தமும் இங்கே காட்டப்படுகின்றன.

## விருத்தம்.

விருத்தமாவது சாத்தியத்தின் அபாவத்திலே வியாபிக்கும் ஏது. அது பக்கவிபக்க வியாபக விருத்தம், பக்கவிபக்கைகதேசவிருத்தம் என இருவகை. விருத்தம்-முரணியது.

க. பக்கவிபக்க வியாபகவிருத்தமாவது பக்கத்திலும் விபக்கத்திலும் வியாபித்துச் சபக்கத்திலே வியாபகமாகாத ஏது. (உ-ம்.) சத்தம் நித்தியம் காரியமாகையான்; ஆன்மாவைப்போல. இங்கே காரியமாகையான் என்னும் ஏது பக்கமாகிய சத்தத்திலும், விபக்கமாகிய குடத்திலும் வியாபித்தலும் சபக்கமாகிய ஆன்மாவில் வியாபியாதிருத்தலும் அறிக.

உ. பக்கவிபக்கைகதேசவிருத்தமாவது...............

## அசித்தம்.

அசித்தமாவது பக்கத்திலேசென்று வியாபியாமையான் முடிவு பெறாதிருக்கும் ஏது. வியாத்தியோடுகூடிப் பக்கத்திலேசென்று முடியும் ஏதுவே முடிவு பெறுவது. அசித்தம் முடிவு பெறாதது. சித்தம்—முடிவு பெறுவது.

## அசித்தவகை.

| | |
|---|---|
| க. சொரூபாசித்தம். | எ. ஆசிரயைகதேசாசித்தம். |
| உ. வியாத்தியதிகரணாசித்தம். | அ. வியர்த்தவிசேடியாசித்தம். |
| ௩. விசேடியாசித்தம். | கூ. வியர்த்தவிசேடணாசித்தம். |
| ச. விசேடணாசித்தம். | ௰. சந்தேகாசித்தம். |
| ரு. பாகாசித்தம். | கக. சந்தித்தவிசேடியாசித்தம். |
| சா. ஆசிரயாசித்தம். | கஉ. சந்தித்தவிசேடணாசித்தம். |

க. சொரூபாசித்தமாவது பக்கத்திலே சொரூபம் இன்மையான் முடிவுபெறாத ஏது. சொரூபம தன்னியல்பு (உ-ம்.) சத்தம் அநித்தியம் காணப்படுகையான்; குடம்போல. இங்கே சத்தமாகிய பக்கத்திலே காணப்படுகை என்னும் ஏது தன்னியல்பில் இல்லை.

உ. வியாத்தியதிகரணாசித்தமாவது...............

.........................

௩. விசேடியாசித்தமாவது தன்பாலுள்ள விசேடியம் பக்கத்தின்மையான் முடியாத ஏது. (உ-ம்.) வாயு காட்சிப்பொருள் பரிசமுடைய உருவமுடைமையான். இங்கே ஏதுவின்கணுள்ள உருவ

முடைமையாகிய விசேடியம் வாயுவாகிய பக்கத்தில் இன்மை அறிக. இதனைச் சிவஞானமுனிவர் "விசேடியமில்லது" என்பர்.

௪. விசேடணாசித்தமாவது தன்பாலுள்ள விசேடணம் பக்கத்தின்மையான் முடியாதது. உ-ம. சத்தம் அநித்தியம் காணப்படும் பொதுமையுடைமையான். இங்கே ஏதுவிலுள்ள காணப்படுமையாகிய விசேடணம் சத்தமாகிய பக்கத்தின்மை அறிக. இதனைச் சிவஞானமுனிவர் " விசேடணமில்லது " என்பர்.

௫. பாகாசித்தமாவது ஒரு பாகத்திலிருத்தலின்மையான் முடியாத ஏது. உ-ம். உயிருமுடம்பும் நித்தியம். காரியமாகையான் இங்கே காரியமென்னும் ஏது உயிருமுடம்பும் என்னும் பக்கத்திலே ஒரு பாதியாகிய உயிரில் இருத்தலின்மை அறிக.

௬. ஆச்ரயாசித்தமாவது ...............

........................

௭. ஆச்ரயைகதேசாசித்தமாவது ...............

........................

௮. வியர்த்த விசேடியாசித்தமாவது பயனிலதாகிய விசேடிய முடைமையான் முடியாத ஏது. உ-ம். சத்தம் அநித்தியம் காரியமான சாமானியமுடையதாதலின். இங்கே சாமானியம் என்னும் விசேடியம் வியர்த்தம். வியர்த்தம் - பயனிலது.

௯. வியர்த்தவிசேடணாசித்தமாவது பயனிலதாகிய விசேடண முடைமையான் முடியாதஏது. உ-ம். சத்தம் அநித்தியம், சாமானியமான காரியமாதலின். இங்கே சாமானியம் என்னும் விசேடணம் வியர்த்தமாதல் அறிக.

௧0. சந்தேகாசித்தமாவது ஐயமுடைமையால் முடிவுபெறாத ஏது. உ-ம். இம்மலை நெருப்புடையது. புகையோ பனியோ தோன்றலால். இங்கே புகையோ ? பனியோ என்பது ஐயம்.

௧௧. சந்திக்த விசேடியாசித்தமாவது ஐயப்பட்ட விசேடிய முடைமையான் முடியாத ஏது. உ-ம். கபிலர் இப்பொழுது விருப்பு

வெறுப்புக்களோடு கூடினவர். புருடதத்துவத்தோடுகூடிய தத்துவ ஞானமில்லாத புருடராகையின். இங்கே புருடதத்துவத்திற்குவிசேடியமாய்நின்ற தத்துவஞானம் அவரிடத்திலே உண்டோ? இல்லையோ? எனத் தெரியாமையால் ஐயப்பட்டதாயிற்று. சந்தித்தம் - ஐயப்பட்டது.

௧௨. சந்தித்தவிசேடணாசித்தமாவது ஐயப்பட்ட விசேடண முடைமையான் முடியாத ஏது. உ-ம். கபிலர் இப்போது விருப்பு வெறுப்புக்களோடு கூடினவர். தத்துவஞானமில்லாத புருடதத்துவ முடைமையால், இங்கே புருடதத்துவத்திற்குத் தத்துவஞானமின்மை விசேடணம். தத்துவஞானம் அவரிடத்திலே உண்டோ? இல்லையோ என்பது சந்தித்தம்.

இங்கே எழுதப்பட்டவைகளிலுள்ள வழுக்களைத் திருத்திவிட வேண்டும். சித்தியாருக்கும் உரைக்கும் தர்க்கசங்கிரகம்முதலிய நூல்களுக்குமுள்ள முரண்களையும் இணக்கவேண்டும். எழுதப்படாதவற்றின் விவரம் எழுதவும்வேண்டும். மறைஞானசம்பந்தருரைக்கு முதனூல் யாது என்பதையும் அறிவிக்கவேண்டும்.

இவைகளைச் சித்தியார் முதலிய சித்தாந்தசாத்திரங்களையும், அவற்றின் உரைகளையும், அவைகளை உள்ளவாறுணர்தற்குக் கருவிகளாய் விளங்கும் தருக்கம், இலக்கணம், நிகண்டு, புராணம் முதலிய நூல்களையுங்கற்றுணர்ந்த பண்டிதர்களும், தருக்கம் முதலிய கற்றுணர்ந்த பண்டிதர்களும் நன்குநோக்கி உரைகளையும்நோக்கித்தமது கருத்தை எழுதக்கடவர்.

சைவதாபன நிமித்தம் சைவப்பிரசங்கஞ்செய்தல், சைவசமாசந்தாபித்தல், நூலுரைகளை எழுதுதல், எழுதுவித்தல், கற்பித்தல் முதலியவற்றிலே சிந்தையுள்ளார்க்கு இவ்விடயத்திலுஞ்சிந்தைசெல்லும். அவர்க்கு இவ்விடயத்தை அறிதலும் அவசியம்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

# மதுரைத்தமிழ்ச்சங்கம்.

## தனித்தமிழ்ப்பரீக்ஷை வினா.

---

## பண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

மஹாமஹோபாத்தியாய

**வே. சாமிநாதையர்.**

---

## இலக்கணம் I.

---

சித்தார்த்தி௵ பங்குனி௴ 24௳ (5-4-20) 10-மணிமுதல் 1-மணிவரை.

(அம்சம் 60.)

I. (1) தொல்காப்பியத்திற்குத் தமிழில் முதனூலுண்டென்பதற்கு உரிய ஆதாரங்கள் இரண்டெழுதுக.

(2) அதிகாரமென்பதற்குச் சேனாவரையர்கொண்ட பொருள் யாது? சிவஞானமுனிவர்கொண்ட பொருள் யாது?

(3) விளியாக்கத்திற்கும் வேற்றுமை யியலுக்கும் உரையாசிரியர் காட்டிய இயைபு என்ன? அது பொருந்துவதன்றென்பதற்குச் சேனாவரையர் என்ன நியாயங் காட்டினர்?

(4) எச்சவியலென்பதற்கு உரையாசிரியரும் சேனாவரையரும் கொண்ட பொருள்களெவை?

(5) பிரயோகவிவேக நூலுடையாரிடத்துள்ள விசேட இயல்புகள் யாவை?

(6) பண்டையுரையாசிரியர்களுள் யார்யாரிடத்து இவர்க்கு நன் மதிப்புண்டு? காரணத்துடன் தெரிவிக்க:

(7) வரருசி, பதஞ்சலி யென்பவர்களுக்குரிய வேறு பெயர்களென்ன? இவர்களியற்றியவை யாவை?

II. (1) "ஆயெட்டென்ப தொழின்முதனிலையே" "அவ்விருமுதலிற் றோன்றுமதுவே", இவற்றுள் எட்டு, இருமுதலென்பன யாவை?

(2) "பெயரினுமெய்தொகையுமாருளவே யவ்வுருபியலுப்பாலான" இதற்கு உரையும் உதாரணமு மெழுதுக.

(3) "குன்றியலுகரத்திறுதியாகும்" இதிற் குற்றியலுகரமென்னாமைக்குக் காரணமென்ன?

(4) "குஐஆனெனவரூஉமிறுதி" இதில் உருபுகளைமாற்றி அமைத்ததிலுள்ள விசேடமென்ன?

(5) "செய்கென்கிளவிவினைகொண்டுமுடியினு மவ்வியறிரியாது" என்பதைத் தடை விடைகளால் விளக்குக.

(6) "பொருட்குப்பொருடெரியினதுவரம்பின்றே" இச்சூத்திரம் எதற்காகக் கூறப்பட்டது?

(7) புணரியனிலையிடைப்பொருணிலைக்குதவுநவும் வேற்றுமைப் பொருள்வயினுருபாகுநவும் ஒப்பில்வழியாற்பொருள்செய்குநவு மாகிய இடைச்சொற்களின்வகையை விளக்கி முறையேயொவ்வோருதாரணம் தருக.

III. (1) முன்னிலைசுட்டியவொருமைக்கிளவி பன்மையொடுமுடிவது பெரும்பாலும் எந்த நூலில்? அங்ஙனம் முடிவதற்குக் காரணமென்னை?

(2) வினைகொண்டுமுடிதலே விதியாகப்பெற்ற மாரீற்று வினைச்சொல் "பாடன்மாரெமரே" என்புழிப் பெயர்கொண்டு முடிந்ததற்குச் சமாதானம் என்னை?

(3) குறைச்சொற்கிளவிக்கும் தொகுக்கும்வழித்தொகுத்தற்கும் வேறுபாடு யாது?

(4) பெயரெச்சம் எவ்வகைப்பெயர்களைக்கொண்டு முடியும்? "நின் முகங்காணுமருந்தினேன்", "ஆறுசென்றவியர்" என்பவற்றிலுள்ள பெயரெச்சங்கள் அப்பெயர்களுள் எவற்றைக்கொண்டு முடிந்தன?

(5) "உரற்கால்யானையொடித்துண்டெஞ்சிய யாஅ வரிநிழற்றுஞ் சுரம்" இதிலுள்ள வினையெச்சமுடிபு, "முதனிலைமூன்றும் வினைமுதன்முடிபின" என்னும்விதிக்கு மாறென்பதைப் புலப்படுத்திச் சமாதானமும் எழுதுக.

(6) "அரசோதஞ்சம்", "சிற்றைக்குரார்யாரோ" இவற்றிலுள்ள இடைச்சொற்கள் எவ்வெப்பொருளில் வந்தன?

(7) "புரையமன்றுபுரையோர்கேண்மை", "ஏலபெக்கம்" "நடமருப்பெருமை", பணைத்துவிழ்பழி", "அவலெறியுலக்கைப் பாவிறந்தயல", "ஆங்கவைஇயமார்பே", "கனவுப்புகு விறலியிற்றோன்றும்:" இவற்றிலுள்ள உரிச்சொற்களை முறையே எடுத்துக்காட்டி அவற்றிற்குப் பொருளுமெழுதுக.

(8) "எழுதுவரிக்கோலத்தாரீவார்க்குரியார்": இதனுற் குறிக்கப்பட்டது யாது? இஃது எதற்கு உதாரணம்?

(9) "அரியகானஞ்சென்றோர்க் கெளியவர்மின நடமென்றேனே", "நல்லவையெல்லாஅந்தீயவாந்தீயவு, நல்லவாஞ்செல்வஞ் செயற்கு": இவற்றிலுள்ள ஆக்கத்திற்குக் காரணங்கள் எவை?

IV. (1) வீழேபின், தன்னைத்துறைவன் இவற்றிலுள்ள விகாரங்களை முறையே தெரிவிக்க.

(2) இக்காலத்துப்பயின்றுவாரா அசைநிலைகள், யாவை?

(3) இரட்டைக்கிளவிக்கு 'உவமையென்னை? மொறுமொறுத்தார், குறுகுறுத்தது இவை எவைபற்றி வந்தன? குறுகுறுத்ததென்பதைப் பிரித்தாலென்னை?

(4) பன்மைபற்றியவழக்கிற்கும் தலைமைபற்றியவழக்கிற்கும் ஒவ்வோருதாரணம் தருக.

(5) உயர்திணைப்பெயர்களுள் விளிகொள்வன எவை?

V. (1) வழுக்காத்தல் எத்தனை வகைப்படும்?

(2) வேற்றுமையென்பதற்குப் பொருளென்னை?

(3) ஞாபகம், வெள்ளொக்கலர், இனச்சுட்டில்லாப்பண்புகொள் பெயர்க்கொடை, ஐயப்புலப்பொதுச்சொல், நோக்கனோக்கம், நின்றுவற்றல்: இவற்றை விளக்குக.

(4) ஆக்கம், துறுங்கு, இடைநிலை, வண்ணக்கர்: இவற்றுக்குப் பொருளென்னை?

IV. (1) செயப்படுபொருளைச் சேனாவரையர் வகுத்துக்கொண்ட வகைகள் இன்னவென்று தெரிவிப்பதுடன் பிரயோகவிவேக நூலுடையார் அதற்குக்காட்டிய ஆதாரத்தையும் தெரிவிக்க.

(2) சநிசத்தமியைத் தொல்காப்பியரும் பரிமேலழகரும் எவ்வாறு வழங்குவர்?

(3) உருபுமயக்கத்திற்கும் பொருண்மயக்கத்திற்குமுள்ள வேறுபாடென்னை?

(4) "கச்சினன் கழலினன்" என்பதற்கு, பிரயோகவிவேகநூலுடையார் எழுதிய இலக்கணமுடிபென்ன?

(5) எழுத்தினியல்பைப்பற்றிச் சத்தநூலாரும் தருக்கநூலாரும் கூறுவனவற்றை முறையே தெரிவிக்க.

(6) செந்தாமரை, செங்கரும்பென்பன எங்ஙனம் விரிக்கப்படும்?

(7) மக்கட்சுட்டென்பதற்குக் கல்லாடரும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறிய இலக்கணவிசேடங்கள் என்ன?

---

## பண்டிதர் வகுப்பு.

பரீக்ஷகர்

## ரா. இராகவையங்கார்.

## இலக்கணம். II.

சித்தார்த்தி ஞு பங்குனிமீ 24உ (5-4-20) 2-மணிமுதல் 5-மணிவரை.

(அம்சம் 60.)

I 1. இறையனாரகப்பொருள் களவியல் என்று பெயர்பெற்றதன் காரணத்தை விளக்குக.

2. "கற்புக் களவுபோல ஒருதலையான அன்பிற்றன்று" என்று துணிந்தது எதுபற்றி?

3. முதனூலாகிய இறையனாரகப்பொருளில் "கந்தருவவழக்கமென்மனார் புலவர்" என வழிநூல் வாய்பாட்டாற்கூறியதற்கு ஏது என்னை?

4. நக்கீரனாரும் சிவஞானமுனிவரும் அபிப்பிராயபேதப்படுவனவற்றுள் இரண்டெடுத்துக் காட்டுக.

5. "தானேயவளே தமியர்காண" என்புழித் "தமியர்காண" என்பதற்குப் பொருள்கூறி அங்ஙனம் பொருள்கொள்ளுதற்குக் காரணமுங் காட்டுக.

6. மாயப்புணர்ச்சி, சேட்படகிறுத்தல், படைத்துமொழிகிளவி, களவினுட்டவிர்ச்சி இத்தொடர்களை விளக்குக.

II 1. பாண்டியன் அரிகேசரியின் வரலாற்றை இறையனாரகப்பொருட்கோவைக்கலித்துறையினின்று நீவிர் தெரிந்தவாறு எழுதுக.

2. அறத்தொடுநிலை இன்னதென்று விளக்கி அதற்கு வேறோர் பெயரும் எழுதுக.

3. "வெண்டிரைமேனின்றான்" இவன் வரலாற்றினை நீவிர் தெரிந்தவாறெழுதுக.

4. "கொடுமையில்லைக்கிழவிமேன" இச்சூத்திரம் இன்ன சந்தர்ப்பத்து இன்ன காரணம்பற்றி நிகழ்ந்தது என்று விளங்க எழுதுக.

5. இரவுக்குறிக்கும் பகற்குறிக்குமுள்ள வேற்றுமையினை எடுத்துக் காட்டுக.

6. "அல்லகுறிப்படுதல்" இஃதென்று விளக்கி எழுதுக.

III · 1. "அந்நாவிடத்துமெய்ந்நாணோரீஇ" இதன்கட் கூறிய நாவிடத்தையும் எழுதுக.

2. சேலூர், ஆற்றுக்குடி இவை யாருடையன? ஆதாரத்துடன் எழுதுக.

3. களவினகத்துப்பிரிவினைக் கற்பினுட்போலப்பிரிவென்று ஆசிரியர் வேண்டாமைக்குக் காரணங்காட்டுக.

4. "முன்னமல்லது கூற்றவணில்லை" என்புழி முன்னம் என்பது இன்னதென்று காட்டுக.

5. "முற்படப்புணராதசொல்லின்மையிற் கற்பெனப்படுவது களவின்வழித்தே" இச்சூத்திரத்துக்குப் பொருளெழுதுக.

6. குறியாள்கூறலுக்கு ஒருதாரணங் காட்டுக.

IV 1. எழுத்தென்னுங்குறி உடனிகழ்ச்சிபற்றிய பெயராகாது என்றார்; உடனிகழ்ச்சிபற்றியபெயர் இன்னதென்று விளக்குக.

2. நட,வாமுதலிய முதனிலைகள் நால்வகைச்சொற்களுள் இன்ன என்று காரணத்துடன் எழுதுக.

3. யோகவிபாகம் இஃதென்று விளக்குக.

4. "முப்பஃதென்ப" என்புழி 'என்ப'என் எதிர்காலத்தாற்கூறியதனயத்தை எடுத்துக்காட்டுக.

5. வினைமுதனிலை, பெயர்விகுதி, இடைநிலை, வினைமுதனிலை மேல்வரும்பெயர்விகுதி இவற்றிற்கு வடமொழிப்பெயர் எழுதுக.

6. 'அலங்கடை' இஃது இன்ன சொல் என்று விளக்குக.

V 1. மரபினை என்பது மரபென்னும்பண்படியாகத் தோன்றிய பெயர் என்றார்; வினைக்குறிப்போடிதனிடை வேற்றுமை யிஃதென்று விளக்குக.

2. "னகரவிறுவாய்" என்புழி இறுவாய் என்பது இன்ன தொகை யென்று விளக்க வெழுதுக.

3. "பாணன்பறையன் றுடியன்கடம்பனென், றந்நான்கல்லது குடியுமில்லை" என்புழிப் பாணன் முதலியன இன்னதிணை யென்று காரணத்துடன் எழுதுக.

4. "அகரமுதனகரவிறுவாய்" என்றது அறுவாதமாதல் யாங்ஙனம்?

5. உடம்பொடுபுணர்த்தல் என்பதனை விளக்கி இதற்குதாரணம் தொல்காப்பியப் பாயிரத்தினின்று காட்டுக.

6. திங்களன்னகல்வி, ஞாயிறன்னவாய்மை இவ்வுவமையிலுள்ள பொதுத்தன்மைகளை விளக்குக.

---

# பண்டிதர்வகுப்பு.

## பரீக்ஷகர்

## ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

## இலக்கியம் I

சித்தார்த்தி வரு பங்குனிமீ 25உ (6-4-20) 10-மணிமுதல் 1-மணிவரை (அம்சம் 90.)

### மதுரைக்காஞ்சி.

1. மதுரைக்காஞ்சி என்பதற்குப் பொருளென்னை?

2. மதுரைக்காஞ்சியென்னுமித்தொடர்மொழி என்னதொகை?

*3. சுண்டெக் காஞ்சி என்பது எத்திணையின் பாற்படும்?

4. "ஒலிமுந்நீர்வரம்பாக" என்றதில் முந்நீர் என்பதற்குப் பொருளென்னை?

5. "தென்னவற்பெயரிய துன்னருந்துப்பிற் றொன்முதுகடவுட்பின்னர்மேய-வரைதாழருவிப்பொருப்பிற்பொருந" இவ்வடிகட்குப் பொருளெழுதுக.

தென்னவன் என்றது, இன்னும் யார்யார்க்குப் பெயராகுமென்று விசேடவுரை கூறினர்?

6. "அரசுபடவமருழக்கி - முரசுகொண்டுகளம்வேட்ட - வடுநிறுயர் புகழ்வேந்தே" என்றதில் களம்வேட்டல் என்றதற்குப் பொருளென்னை? அதனை விரித்தெழுதுக.

7. "பாலைசான்றசுரஞ்சேர்ந்து" என்றதற்குப் பொருள் வரைக. பாலையை வேறோர் நிலமாகக் கூறியதற்கு விசேடவுரையில் என்ன காரணங் கூறியிருக்கின்றனர்?

8. "ஓவுக்கண்ட விரும்பெருநியமத்து" என்றதற்குப் பொருள் வரைக.

9. "சிறந்தவேதம் விளங்கப்பாடி" என்றதில் அதர்வமொழிந்த வேதம் என வுரைகூறினர்; அவ்வாறு கூறுவதற்குக் காரணமென்னை?

10. "தாமேவத்தோன்றியநாற்பெருங்குழுவும்" இவ்வடிக்குப்பொருளை விளக்கி வரைக.

11. இந்நூலுள்ளே நீவிர் தெரிந்துகொண்ட சிறந்த பொருள்களிவை யென வரைக.

12. அவல், மிளை, ஐயவி, தாரம், வை, சுனைத்தலை, கவல், அல்லங்காடி, ஒளிச்சிறை, இறும்பூது, பொய்தல், அகவல் என்னுமிப்பதங்கட்கு இந்நூலுள் என்ன பொருளுரைத்தார்?

## சீவகசிந்தாமணி.

1. "காய்மாண்ட தெங்கின்பழம்
பூமாண்ட தீர்தேன்"
இதில் வந்தவெதுகை யின்னதென வரைக?

2. "குழவிவெண்மதிக்கோளுழக்கின்றதேன்
முழவினின்றதிர்மொய்வரைச்சென்னியி
னிழியும்வெள்ளருவித்திரள்யானையுங்
குழவின்மாடத்துமிற்கொடிபோன்றவே"
இக்கவிக்குப் பொருள்வரைக. இதிற் பொருள்கோள் இன்னதெனவும், அலங்காரமின்னதெனவும் வரைக.

3. "விழுக்கலஞ் சொரியச்சிந்தி வீழ்ந்தவை யெடுத்துக்கொள்ளா வொழுக்கினரவர்கள்செல்வவுரைப்பரிதொழிகவேண்டா" இச் செய்யுளிற்கூறிய வேண்டா என்னுஞ்சொல்லை, ௭௬ ஆவது

முதற் பலகவியிலுங் கூறியிருக்கின்றார்; அச்சொற்குப் பொருளென்னை? என்ன சொல்? என்னபாலை யுணர்த்தும்?

4. சீவகனுற்பத்தியானபின் "கறைபன்னீராண்டெல்விடுமின்" எனக் கூறியிருக்கின்றது; பன்னீராண்டென்னும் வரையறை எதன்பொருட்டு?

5. சீவகனெனப் பெயர் எய்தியதற்குக் காரணம் யாது?

6. "பாயுமாரிபோற் பகழிசிந்தினா
ராயர்மற்றெதிர் தமிரினாயினார்"
இதிற் சிந்தினார் என்பதனை என்னசொல்லாகவைத்துரைசெய்தார்? ஈண்டு ஆயரென்பது யாரை?

7. "தன்பான்மனையாளயலான்றலைக்கண்டபின்னு மின்பாலடிசிற் கிவர்கின்றலைகப்பேடிபோலா" இவ்வடிகட்குப் பொருள்வரைக. போலா என்பதனை இங்கே என்னசொல்லாகவைத்துரைகூறினார்.

8. "முருகுவிம்முகோதையார்" என்னுமுதற்குறிப்புள்ள கவியில், ஐங்கனை இரண்டெனவுரைசெய்தார்; அவையாவை?

9. "பருந்துமதனிழலும்பாட்டுமெழாலுந்
திருந்துதார்ச்சீவகற்கேசேர்ந்தனவென்றெண்ணி"
இவ்வடிகட்குப் பொருள் விரித்து வரைக.

10. "ஐந்துமூன்றடுத்தசெல்வத்தமளிமூன்றியற்றி"
என்னுமிதற்குப் பொருள் விரித்து வரைக.

## கலித்தொகை.

1. "தாளிற்கடர்தட்டித்தந்தையைக்கொன்றானைத்
தோளிற்றிருகுவான்போன்ம்"
இவ்வடிகட்குப் பொருள் விளங்கவரைக.

2. "இருளையிஃதொன்றுகண்டை யிஃதொத்தன்
கோவினத்தாயமகனன்றேயோவான்
மறையேற்றின்மேலிருந்தாடித்துறையம்பி
யூர்வான்போற்றோன்றுமவன்"
இவ்வடிகட்குப் பொருள் வரைக.
கண்டை, ஒத்தன் இவை என்ன சொற்கள்?
இவற்றின் பகுதிகள் யாவை?

3. "பான்மதிசேர்ந்தவரவினைக் கோள்விக்கு
கனிறவண்ணனும்போன்ம்" இவ்வுவமானத்திற்குக்கூறிய
வுவமேயமின்னதென வரைக.

4. "பெரும்பெயர்க்கணிச்சியோன்மணிமிடற்றணிபோல
விரும்பினாரெருத்தி னேர்நிமிற்குராலும்"
இவ்வடிகட்குப் பொருள் வரைக.
பெரும்பெயரென்றதற்கு, இவ்வுரையிற்கூறிய பொருளன்றி
வேறு பொருளுணர்ந்திருப்பினதனை வரைக.

5. "வைகற்பதின் மரைக்—க்ாமூற்றுச் செல்வாயோர்
கட்குத்திக்கள்வனை" என்றதிற்கூறிய பழமொழியாது?
ஈண்டு அதன் கருத்தென்னை?

6. "தருமனூற்றூழப்பெய்திவ்பூவனூட்டி
யெருமைப்படையோடெமரீங்கயரு
பெருமணமெல்லாம்"
இவ்வடிகட்குப்பொருள் வரைக.
இவ்வடிகளில் ஆகு பெயர் யாது?

7. "காணலையுண்டகலெக்கள்ளை மெய்கூர
ஈருதுசென்று நலேங்கவுரைத்தாங்கு"
இவ்வுவமை எதற்காகக் கூறியது? ஆங்கு என்றது என்னசொல்?

8. "பாட்டங்காற் கன்றூடு செல்வேம்"
"தொடீஇயசெல்வார்த்துமித்து" இத்தொடர்கட்குப் பொரு
ளென்னை?

9. "போழிற்புனைந்தவரிப்புட்டில் புட்டிதுனென்னுள"
இவ்வடிக்குப்பொருள்வரைந்து, இவ்வடிவந்தபாட்டுக்குத் துறை
யும் வரைக.

## பண்டிதர் வகுப்பு.

பரீக்ஷகர்

தி. த. கனகசுந்தரம்பிள்ளை.

---

## இலக்கியம் II.

---

சித்தார்த்தி௵ பங்குனிமீ 25௳ (6-4-20) 2 மணி முதல் 5 மணி வரை.
(அம்சம் 90.)

[இராமாயணம்-பாலகாண்டம்; திருக்கோவை, 150-307; பெரிய திருமொழி முதல் 300 செய்யுள்.]

I. (1) கம்பராமாயணம், திருக்கோவை, பெரியதிருமொழி என்னும் இம்மூன்று நூல்களும் தோன்றியகாலத்தை ஆராய்ந்து அவற்றின் முற்பிற்பாடுகளை ஆதாரத்துடன் புலப்படுத்துக.

(2) கம்பருடைய செய்யுணடை எத்தன்மைத்தென்று விவரிக்க.

II. (1) இராமன்முறித்த வில்லின் வரலாறு கார்முகப்படலத்திற் கூறப்பட்டதற்கும் பரசுராமப்படலத்திற் கூறப்பட்டதற்குமுள்ள வேற்றுமை யாது? அதற்குக் காரணமென்ன?

(2) சனசேபன்கதை மிதிலைப்படலத்திற் கூறப்பட்டதற்கும் வேதத்தில் (ஆத்திரேயபிராமணத்தில்) கூறப்பட்டதற்குமுள்ள வேற்றுமை யாது? அதற்குக் காரணமென்ன?

(3) இராமன் அயோத்தியினின்று விசுவாமித்திரரோடு அவரது ஆசிரமஞ்சென்று பின்னர் அங்குநின்றும் புறப்பட்டு மிதிலையை அடைந்த வழியைப் புலப்படுத்துக.

III. (1) செம்முதற்கல்விமுளைத்தெழுந்தெண்ணில்கேள்வி
ஆரும்முதற்றிண்பணைபோக்கியருந்தவத்தின்
சாகைதழைத்தன்பரும்பித்தருமம்மலர்ந்து
போகக்கனியொன்றுபழுத்ததுபோலுமன்றே.

(a) இதற்குத் தெளிவாக உரையெழுதி இதன் கருத்தின்னதென்று விளக்குக.

(b) இதற்கும் "அம்மான கருக்கரசன்" என்றற்றொடக்கத்து அடுத்த பாட்டிற்குமுள்ள இயைபென்ன.

(2) நின்றேநெறியுணர்வானொருநிலைவானனையழையா
நன்றேபழுதுளதோநயமுரைநீநடுவென்னக்
குன்றேபுரைதோளானெதிர்புள்ளின்குறிதேர்வான்
இன்றே வருமிடையூறதுநன்றாய்விடுமென்றான்.

இன்றேவருமிடையூறதுநன்றாய்விடுமென்று புள்ளின் குறி தேர்வான் கூறியதற்கு ஆதாரம் யாது?

(3) வெங்கண்யானையனான்றனிவெண்குடை
திங்கடங்கள்குலக்கொடிசீதையாம்
மங்கைமாமணங்காணியவந்தருள்
பொங்கிப்பொங்கித்தழைப்பதுபோன்றதே.
இதில் சீதையைத் திங்கடங்குலக்கொடி என்றது யாங்ஙனம்?

(4) (a) மன்மதக்களிறுமாதர் கொங்கையுமாரனம்புந்
தென்வரைச்சாந்துநாறுஞ்சேனையுமிறுத்ததன்றே.

(b) இஞ்சி - குன்றேறுகுதோளார்குணங்கூட்டிசைக்குப் பையென்ன - ஒன்றேடிரண்டுமுயர்ந்தோங்கினவும்பர்நாண. இவற்றின் பொருளை விளக்குக.

IV. (1) தமிழில் அகப்பொருட்கோவைதோன்றியவரலாற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் புலப்படுத்துக.

(2) திருச்சிற்றம்பலக்கோவை தொடர்நிலைச்செய்யுளா? அன்றா? உமது விடைக்கு ஆதாரங்காட்டுக.

(3) உள்ளுறையினியல்பு யாது? நீவிர் படித்த திருக்கோவையிலிருந்து உதாரணமெடுத்துக்காட்டி விளக்குக.

(4) குறிப்புநிலைக்கும் குறிப்பெச்சத்துக்குமுள்ள வேற்றுமை என்ன? திருக்கோவையிலிருந்து உதாரணமெடுத்துக்காட்டி விளக்குக.

V. (1) (a) பாலன்புகுந்திப்பரிசினினிற்பித்தபண்பினுக்கே பாலனென்னும் பான்மயக்கம் அதிகாரப்புறனடையாற் கொள்க.

(b) செம்பஞ்சியின்மிதிக்கிற் பதைக்குமலர்ச்சீறடியென்பன ஒருசொன்னீர்மைப்பட்டு நின்றன. இதனை அதிகாரப் புறனடையாற் கொள்க.

(c) நறைக்கண்மலிகொன்றையோனின்றுநாடகமாடுதில்லை. நாடகமென்பது ஈண்டுக்கூத்தென்னுந் துணையாய்நின்றது.

(d) சுரும்புறுநீலம் - மேலாற்சுரும்புவந்துபொருந்து நீலமலர்; எதிர்காலவினை "மென்னனையாய் மறியே பறியேல்" என்பது போலக் கொள்க.

இவ்வுரைக்குறிப்புகளின்பொருளைத் தெளிவாக விளக்குக.

(2) (a) அருந்தும்விடமணியாமணிகண்டன் - அருந்துமென்பது காலமயக்கம்.

(b) பாமரைமேகலைபற்றி - பாவுமென்னுமீற்றுமிசை யுகரம் மெய்யொடுங்கெட்டுத காலமயக்கமாய்நின்றது.

(c) தேம்பலிடைஞெமிய: - தேம்பலிடை இருபெயர்ப்பண்புத்தொகை.

(d) வண்டில்லைமெல்லங்கழிசூழ் - மெல்லங்கழியென்பதூஉம் ஒரு பண்புத்தொகை முடிபு.

இவ்விலக்கணக்குறிப்புக்களை விளக்குக.

(3) (a) புகழும்பழியும்பெருக்கிற்பெருகும்பெருகின்று -
நிகழும்நிகழாநிகழ்த்தினல்லால்

இதற்கு விளக்கமாக உரை யெழுதுக.

(b) பாயினமேகலைபன்னடையளல்லள் - பாயினமேகலை என்னுஞ் சொற்கள் ஒருசொன்னீர்மைப்படுதலின் ஆகுபெயரெனப்படும்.

பாயினமேகலை என்பது ஆகுபெயரா? அன்மொழித்தொகையா? பிரயோகவிவேகநூலுடையார்கருத்து யாது?

(c) ஒத்ததொவ்வாதுரைத்தோழி
கொத்தவிழ்கோதையாற்கூறுவிக்குற்றது.

இதற்குப் பொருளுரைத்து இலக்கணக்குறிப்புமெழுதுக.

(d) காமமிக்ககழிபடர்கிளவி, கூடவிழைத்தல், அறத்தொடுநிற்றல்; பெரும்பான்மைகூறல், பதப்பொருள்கூறி இத்துறைகளை விளக்குக.

(4) (a) வரைபொருட்குத்தலைமகன்போக, அவன் வரவு நீட்டித்தலான், தலைமகளதாற்றாமையானுண்டாகிய நோயை முருகனால் வந்ததென்று கட்டுவித்திகூறியது பொய்யன்றோவென்று கடா விடைகளான் ஆராய்க.

(b) புகழுவமை, பரியாயம், புகழாப்புகழ்ச்சி, ஒற்றுமைக் கொளுவுதல்.

இவ்வலங்காரங்களுள் ஒன்றையெடுத்து விளக்கித் திருக்கோவையிலிருந்து உதாரணமுங் காட்டுக.

(c) கட்டுவித்தி, தக்கின்று, சிறந்தன்று

இப்பகுபதங்களைப் பகுத்துக்காட்டிப் பொருள்கூறுக.

(d) நாமரையாமத்தென்னைவந்துவைகியந்ததுவே.

இங்குவந்துள்ள நாமென்னும்பதத்துக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக.

(e) கழிகட்டிரவு, சொற்புள், வலக்காரம், அழற்றடம் இவற்றுக்குப் பொருள்கூறுக.

VI. (1) திருமங்கைமன்னனை மாறன்பணித்ததமிழ்மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்தான் என்று கூறுவது யாது காரணத்தாலென்று கூறுக.

(2) திருவாய்மொழிபோலப் பெரியதிருமொழிக்கும் பண்வகுக்காது இராகமும் தாளமுங் குறித்ததற்குக் காரணமென்னை?

(3) பெரியாழ்வார்முதலியோர்பாடல்கள் திருமொழி என்று பெயர்பெறத், திருமங்கைமன்னன் பாடல்மாத்திரம் பெரியதிருமொழி என்று பெயர்பெற்றதற்குக் காரணமென்னை?

(4) பெரியதிருமொழியிலுள்ள அகச்சான்றுகளால் திருமங்கைமன்னன் காலம் நன்கு நிச்சயிக்கப்படுமென்பர். அவையாவை?

VII. (1) அட்டபுயகரம், பரமேச்சுரவிண்ணகரம், நந்திபுரம், கடன்மல்லை, ஆலிநகர்.

இவை எவ்வெவ்விடத்திலுள்ளனவென்று கூறுக.

(2) திருமாலின் அகடிதகடனசாமர்த்தியத்தைத் திருமங்கைமன்னன் உணர்த்திய பாட்டை எடுத்தெழுதி விளக்குக.

(3) பெரியதிருமொழியில் திருப்பிரிதி, வதரி, நைமிசாரணியம் முதலிய தலங்களுக்குப் பாடல்களுள்ளன. இத்தலங்களுக்கெல்லாம் திருமங்கைமன்னன் நேரேசென்று தரிசனம் செய்து பாடினரோ? ஆராய்க.

(4) வாளரக்கர் - தலைவன்றலைபத்தறுத்துகந்தான் சாளக்கிராம மடைநெஞ்சே.

இங்கேகுறித்த சாளக்கிராமமும் ஒரு திருப்பதியோ? ஆராய்க.

VIII. (1) கலியன் என்றும் கலிகன்றி என்றும் திருமங்கைமன்னனுக்குப்பெயர்வந்தது எங்ஙனம்?

(2) ஏர்கொள்பூஞ்சுனைத்தடம்படிந்துணலெட்டுமிட்டிமையோர்கள்-பேர்களாயிரம்பரவிநின்றடிதொழும்பிரிதி.
இனமலெட்டென்பனயாவை?

(3) திருமாலாடிய குடக்கூத்தினிலக்கணம் யாது?

(4) தாடாளன்—இதனைப்பிரித்து விளக்கிப்பொருள் கூறுக.

(5) ஒக்கலித்தல், நவிற்றல், ஆயம், ஒருக்குதல், எள்கல், முழுசுதல் அறை, சோழு.
இப்பதங்கள் பெரியதிருமொழியில் என்னபொருளில் வந்துள்ளன?

---

## பண்டிதர்வகுப்பு.

### பரீக்ஷகர்

### அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

## வசனமும், தர்க்கமும்.

---

சித்தார்த்தி-ௐ பங்குனிமீ 26உ (7-4-20) 10-மணிமுதல் 11½-மணிவரை.
(அம்சம் 60.)

### திராவிடப் பிரகாசிகை.

க. தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் யாவர்? வேத்துணையோர் பரிபாடலாவது யாது? தலைச்சங்கமிரீஇயினார் யாவர்? அச்சங்கமிருந்த இடம் யாது? அவர்க்கு நூல் யாது?

உ. தொல்காப்பியவுரைகாரர்கள் யாவர்? இவ்வுரைகாரருள்ளே சிறந்தவர் யாவர்? சேனாவரையர் எழுத்ததிகாரத்துக்கு உரை செய்யாமைக்குக் காரணம் யாது?

ங. பதினெண் கீழ்க்கணக்குகள் யாவை? எட்டுத்தொகை யாவை? உருத்திரங்கண்ணனார் பாட்டு எதனுள் அடங்கும்?

ச. அட்டாதசவித்தைகள் யாவை? வைதிக சாத்திரங்கள் யாவை? ஐக்கியவாத சைவசாத்திரங்கள் யாவை?

ரு. இராமாயணத்தைப்பற்றியும், இரகுவமிசத்தைப்பற்றியும் சுருக்கி எழுதுக.

சா. சித்தாந்தசாத்திரம் எத்தனை? சரியாபாதத்துள்ளே சொல்லப்படும் விடயங்கள் யாவை? சரியையிற்சரியையாவது யாது?

எ. உபபிருங்கணம், தரிசனம், அதிகாரம், உபாக்கியானம், சையுத்தம், கார்த்திருசட்டி, சுகத்தெறிதல், கடாவிடுதல் என்பவைகளின் பொருள்கள் யாவை?

அ. நல்லாசிரியர் இலக்கணம் யாவை? நன்மாணாக்கரிலக்கணம் யாவை?

கூ. கல்விச்சிறப்பைப்பற்றித் தெரிந்தவரை எழுதுக.

௰. இளந்தமிழ்ப்புலவர் என்னும் பட்டத்துக்கு உரியவர் யாவர்?

## அன்னம்பட்டீயம்.

௧. அன்னம்பட்டீயம் என்பதை விரித்துப்பொருள்கூறுவது எப்படி? அது எத்தனைகிரந்த முடையது? எத்தனை உரையுடையது? அதற்குச் சந்திரசிங்கர் செய்த உரைக்குப் பெயர் யாது?

௨. பொருட்குப் பொதுவிலக்கணமாவது யாது? சிறப்பிலக்கணமாவது யாது? "விப்பிரனுவான் பூணுநூலுடையவன்" என்பதில் இலக்கணத்தைச்சிதைக்கும் குற்றங்களிருந்தால் அவைகளை விளக்குக.

௩. இந்திரியமாவது யாது? சரீரமாவது யாது? போகமாவது யாது?

௪. விசேடணவிசேடியத்தன்மைச்சம்பந்தத்தை விரித்து விளக்குவதெப்படி? இது பதார்த்தவகையுள்ளே எதனுள் அடங்கும்?

௫. அநுமானவுறுப்புக்களுள் ஏதுவாவது யாது? நிகமனமாவது யாது? நிகமனத்திற்குப் பயன் யாவை?

௬. "சத்தம் அநித்தியம்-அறியப்படுகையால் குடம் போல" என்னும் இஃது எதற்கு உதாரணமாகும்? "கட்டில் கூப்பிடுகின்றது" இஃது எதற்கு உதாரணமாகும்?

௭. தாத்பரியம், கதம்பமுகுளநியாயம், தகுதி, பிரமேயம், பிரேத்தியபாவம், அபவர்க்கம் என்பவைகளை விளக்குக.

௮. அழிவுபாட்டபாவமாவது யாது?

(இவற்றுள்ளே எவை யெனினும் ஏழு வினாக்களுக்கு விடைகள் எழுதினாற்போதும். காலம் காணுமாயின்; முற்ற எழுதுவது நன்று.)

---

## பண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

V. P. சுப்பிரமணியமுதலியார்.

---

## செய்யுளியற்றல்.

---

சித்தார்த்தி-ஹு பங்குனி-மீ 26உ (7-4-20) 12-மணிமுதல் 1½-மணிவரை.

(அம்சம் 60.)

1. பின்வருவதன் கருத்தை அமைத்து ஒரு நேரிசைஆசிரியப்பா எழுதுக.

'இராகவர்' இலக்குமணர்சகிதராய், விசுவாமித்திரரை முன்னாகச் செல்லச்செய்து, (கௌதமரது) ஆச்சிரமத்திலே பிரவேசித்தார். அங்கே கடவுளால் தெய்வீகவசீகரசக்தியோடு கூடியவளாய்ப்

பெண்கன்னாயசமாகப்படைக்கப்பட்டாற்போன்று, தேவாசுரரும் அதி சமீபத்திலின்று நோக்கமாட்டாத தேஜஸோடு தன்தவமகிமையினால் சுவாலியாநின்று விளங்கும் அந்தமகத்துவ மாதை (அகலிகையை)க் கண்டார்கள். இரகு வமிசத்திற்றோன்றிய (இராமலக்குமணர்) இருவரும் (வணங்கி) அவள் பாதங்களைப் பற்றினார்கள். அவள், கௌதமர் ("ஸ்ரீராமரால் உன் சாபம் நீங்கும்" என்று சொன்ன) வார்த்தைகள் ஞாபகத்திற்கு வர, அவர்களுடைய பாதங்களைத் தான் பற்றினாள். பின் அவள் மனத்தை ஒருமைப்படுத்திக்கொண்டு அவ்விருவர்க்கும் அர்க்கிய பாத்தியங்கள் அளித்து விதிப்படி அதிதிபூசை புரிந்தாள். உடனே தேவதுந்துமி முழங்கப் புஷ்பமாரி பெருமிதமாக வருஷித்தது. தேவர்களும் அப்சரசுகளும் சந்தோஷங்கொண்டாடினார்கள். தேவர்கள் உத்தமம் உத்தமம் என்று ஆரவாரித்து அகலிகையைக் கவுரவப்படுத்தினார்கள்'

2. செல்வப்பொருளினுங் கல்விப்பொருள் சிறந்தது என்பதை விளக்கி ஒரு கலிவெண்பா எழுதுக.

3. ஓதலினுஞ் சிறந்தது ஒழுக்க முடைமை என்பதை விஷயமாகக் கொண்டு ஒரு அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம் எழுதுக.

## பண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

மு. இராகவையங்கார்.

---

## வியாசம்

---

சித்தார்த்தி௵ பங்குனி௴ 26௳ (7-4-20) $2\frac{1}{2}$-மணிமுதல் $4\frac{1}{2}$-மணிவரை.

(அம்சம் 60.)

1. தமிழ்ப்பாஷையின் சொற்பொருணயங்களின் சிறப்பைப்பற்றி நீவிர்படித்த இலக்கியங்களினின்று விளக்கி ஒரு வியாசம் எழுதுக.

2. மதுரைக்காஞ்சியில் கூறப்பட்ட விஷயங்களைச் சுருக்கமாக மூன்று பக்கத்துள் எழுதுக.

---

## ஆமுதலிருபெயர்

ஆவேயிடைச்சொல்லும்பசுவுமாகும் ௪௭

ஆண்டாரேயுடையோருந்தேவரும் ௪௮

ஆதல்தானேநூலுங்கூத்தும் ௪௯

ஆகுலமென்பதிடும்பையுமோசையும் ௫0

ஆசையேபலம்வாமலமிரண்டாம் ௫௧

ஆமலகந்தான்படிகமுநெல்லியும் ௫௨

ஆஞ்சியேகூத்தமுங்கலிரண்டே ௫௩

ஆம்பிரமேமாமரமும்புளிப்பும் ௫௪

ஆம்பியேகாளானுஞ்சத்தமும் ௫௫

ஆரியனென்பதாதித்தியனும்
மேவலரெனவும்விளம்புமிருபெயர் ௫௬

ஆரமையென்பதுமதிலுங்கூர்மையும் ௫௭

ஆர்கலியென்பதுமழைகடலிருபேர் ௫௮

ஆர்ப்பாவந்தான்போருந்துளியும் ௫௯

ஆவமென்பதம்புபெய்கூடும்
நாழிகையெனவுநவிலுமிருபெயர் ௬0

ஆவல்தானேயாசையுமலர்வும் ௬௧

ஆலியரேவேளாளரும்வேடரும் ௬௨

ஆர்த்தென்பதுவேபோதச்செய்தலும்
செற்றியுமென்றேநிகழ்த்துமிருபெயர் ௬௩

ஆரூபந்தானீங்காதமையும்
அமையாமையுமெனவிருபெயராகும் ௬௪

ஆனியமென்பதுநாளும்பொழுதும் ௬௫

ஆணந்தானேயன்புங்குழம்பும் ௬௬

ஆதனென்பதோரறிவில்லானும்
ஆரியரெனவுமறைக்குமிருபெயர் ௬௭

ஆய்வேயாய்தலும்வருத்தமுமாகும் ௬௮
ஆனுவென்பதுநன்மையுமிரதமும் ௬௯
ஆலலேயாடுதலுமொலியுமாகும் ௭௦
ஆகமென்பதுவேயுடம்புமார்புமாம் ௭௧
ஆசுகமேகணைகாற்றெனவிருபெயர் ௭௨
ஆர்வலரென்பதுகாதலருடனே
கொண்கரெனவுங்கூறுமிருபெயர் ௭௩
ஆடவரேயிளையோரும்புருடரும் ௭௪
ஆய்தலென்பதுநுணுக்கமுந்தெரிதலும் ௭௫
ஆகாரந்தான்வடிவுமூணுமாம் ௭௬
ஆக்கமென்பதுவாழ்வுந்திருவும் ௭௭
ஆதவரேவேதியரேசூரியர் ௭௮
ஆணியேயெழுத்தாணியுமதனோ
டாணியுமெனவேயறையுமிருபெயர் ௭௯
ஆறென்பதுவேதலைக்கடையுடனே
ஆற்றுதலெனவுமாமிருபெயரே. ௮௦

ஆமுதலிருபேர்முற்றும்.

ஆமுதல்முப்பெயர்

ஆகுவேபெருச்சாளியுமெலியும்
கொப்பூழெனவுங்கூறுமுப்பேரே ௮௧
ஆசாரமென்பதுசீலமுங்காட்சியும்
தூசுமெனவேசொல்லுமுப்பேரே ௮௨
ஆசிடைதானேகூட்டமுந்தூசும்
வாழ்த்துமென்றேவழங்குமுப்பேரே ௮௩
ஆசையென்பதுதிசையும்பரிவும்
பொன்னுமென்றேபுகலுமுப்பேரே. ௮௪
ஆதனேவாதனையுஞ்சூழும்
ஏவலெனவுமிசைக்குமுப்பேரே ௮௫

ஆனியென்பதுகேடுமோர்மாதமும்
மூலநாளுமொழியுமுப்பேரே ௮௬

ஆர்வந்தானேவிருப்பமும்வில்லும்
நரகமுமெனவேநவிலுமுப்பேரே ௮௭

ஆனகமேகற்பகமும்படகமும்
துந்துமியென்வுஞ்சொல்லுமுப்பேரே ௮௮

ஆலேயல்லவுமாமென்றிடலும்
ஆலமரமுமாகுமுப்பேரே ௮௯

ஆரையேபுற்பாயும்பரிசையும்
ஆரையுமெனவேயாகுமுப்பேரே ௯0

ஆர்தலென்பதுநிறைதலுமுண்டலும்
குடித்தலுமெனவேமுப்பெயர்கூறும் ௯௧

ஆமுதல்முப்பேர்முற்றும்.

## ஆமுதல் நாற்பெயர்

ஆமென்பதுவேயிடைச்சொலுமீரமும்
ஆமென்றிடலுநீருநாற்பேரே ௯௨

ஆடியென்பதோர்மாதமுங்காற்றும்
கண்ணாடியும்படியாணியுநாற்பேர் ௯௩

ஆடேயாடும்வெற்றியுங்கூர்மையும்
கூத்துமெனவேகூறுநாற்பெயரே ௯௪

ஆண்டென்பதுவேவருடமும்புல்லும்
நெல்லுமவ்விடமுநிகழ்த்துநாற்பேரே ௯௫

ஆலியென்பதாலாங்கட்டியும்
துளியுநீருங்காற்றுநாற்பேரே ௯௬

ஆரலேசெவ்வாயுமதிலும்
கார்த்திகைநாளுமோர்மீனுநாற்பேர் ௯௭

ஆடலென்பதுகூத்தும்வார்த்தையும்
வெற்றியும்பெண்ணாண்கூடலுநாற்பே. ௯௮

ஆர்ப்பென்பதுவேபொருந்தலுஞ்சிரித்தலும்
தூளியுமோசையுஞ்சொல்லுமாற்பேரே. கூகூ

ஆமுதல்ஈற்பேர்முற்றும்.

ஆமுதலிப்பெயர்

ஆவியென்பதுநாற்றமும்புகையும்
வாவியுமூச்சுமுயிருமென்றறந்தேர். க00

ஆலமேவடவிருக்கமுமழையும்
நீருநஞ்சுமலர்ந்தபூவுமாம் க0க

ஆணையென்பதுவேயேவலுமெய்யும்
வெற்றியுஞ்சூளோடிலாஞ்சனையுந்தே. க0உ

ஆமுதலைம்பேர்முற்றும்.

ஆமுதலறுபெயர்

ஆசென்பதுவேசடுதியுங்கவசமும்
அற்பமுங்குற்றமுமோர்வியுடனே
கைக்கருவியுமெனக்கருதுமிறுபெயர். க0௩

ஆசினியேமரம்வயிரமரவுரி
விண்பலாவிசேடமெனும்பெயர்தே. க0ச

ஆரமென்பதுமுத்தும்பதக்கமும்
ஆத்தியுமாலையும்பித்தளையத்தொடு
சந்தனமெனவுஞ்சாற்றமறுபேர். க0ரு

ஆவணமேபுனர்பூசமும்வீதியும்
பீடிகையுஞ்சாதனமுமுரிமையும்
அங்காடியுமெனவறுபெயராமே. க0சு

ஆழியேமோதிரமுந்நேமியும்
கடலுங்கரையும்வட்டமுமாழியின்
கைநுனியெனவுங்கருதுமறுபெயர் க0எ

ஆற்றலென்பதுபொறையுமுயற்சியும்
அதிகமும்வலியுஞானமும்பரித்தலும்
நிலையுடைமையுமெனநிகழ்பேராமே க0அ

ஆமுதலறுபேர்முற்றும்.

ஆமுதலெழ்பெயர்.

ஆதியென்பதுசிவனுமுராரியும்
வேதனுமிரவியுமசோகுமட்செல்வியும்
முதலுமேசோடனுமொழியுமேழ்பெயரே. ௧௦௯

ஆயமேபல்வரியுஞ்சுக்கமும்
கூதுமாதாயுமாதர்கூட்டமும்
கவற்றிற்றாயமுநீளமுமேழ்பெயர். ௧௧௦

ஆரென்பதுவேபாத்தியுங்கூர்மையும்
பாகும்பூமியுஞ்சோதியுநிறைவும்
தோசழியுட்செறியுறப்புமெண்பேராம். ௧௧௧

ஆவேயாச்சாமரமிசையிரக்கம்
இச்சைவியப்பொடுபசுவென்றேழ்பேர். ௧௧௨

ஆமுதலேழ்பேர்முற்றும்.

ஆமுதலொன்பான்பெயர்.

ஆம்பலென்பதுமூங்கிலுநிலவும்
இபமுங்கள்ளுமல்லியுங்கவ்வையும்
ஊதிடும்கொம்புமோரெண்ணுடனே
யோர்பண்ணெனவுமோதுமொன்பான்பேர். ௧௧௩

ஆமுதலொன்பான்பேர்முற்றும்.

ஆமுதற்பலபேர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம் ௩௩௪.

இம்முதலொருபெயர்.

இலிங்கியென்பதுதுறந்தோன்பெயரே. ௧

இறடியென்பதுகருந்தினையாகும். ௨

இருகரையென்பதிடிகரையாகும். ௩

இமிழியேயிசையாமென்னிசைப்பர். ௪

இரும்பையென்பதுகுடமென்றுமே. ௫

இங்கென்பதுவேபெருங்காயமாகும். ௬

இக்குதல்தானேதங்கலாகும் ௭
இட்டளமென்பதுக்கமாகும் ௮
இடவைதானேவழியெனவிசைப்பர் ௯
இடங்கழியென்பதுமெய்க்காதலாகும் ௧௦
இடாகென்பதுவேபுள்ளியாகும் ௧௧
இடாகினிதானேவஞ்சனியாகும் ௧௨
இடும்பரென்பதிராக்கதர்பெயரே ௧௩
இணக்கமென்பதுவேதோழமையாகும் ௧௪
இனுக்கேயழுக்கென்றிசைக்குமென்பர் ௧௫
இண்டேயிண்டையென்றிசினோரே ௧௬
இதழியென்பதுகொன்றையாகும் ௧௭
இதரரென்பதுகீழ்மக்களாகும் ௧௮
இதணமேபரணுமெனவிசைப்பர் ௧௯
இத்தியென்பதுபூளையாகும் ௨௦
இந்திரையென்பதுதிருமகளாகும் ௨௧
இந்தீவரமேநெய்தலாகும் ௨௨
இளமயிலென்பதுகருடனாகும் ௨௩
இமழிதானேயானையின்பேராம் ௨௪
இயவுளென்பதுபிள்ளைப்பெயரே ௨௫
இயக்கர்வேந்தனென்பதுகுபேரன் ௨௬
இயவையென்பதுவழியின்பெயரே ௨௭
இயவரேசண்டாளராகும் ௨௮
இரசதமென்பதுவெள்ளியாகும் ௨௯
இரம்பமேகத்தூரியாகும் ௩௦
இராவணமென்பதுவிளக்கெனலாகும் ௩௧
இரதபதமேபுறவெனப்படுமே ௩௨
இரும்பைதானேயுரகமாகும் ௩௩

இளைதயேகொடியாமெனவிசைப்பர் ௩௪
இலத்திகையென்பதியந்திரவாசல் ௩௫
இலட்டையென்பதுவேயப்பமாகும் ௩௬
இபக்குசோதமென்பதாலெனவிசைப்பர் ௩௭
இமமேபனியென்றிசைத்தனர்புலவர் ௩௮
இலடுதானேகுதிரையென்றாகும் ௩௯
இலாழியென்பதுகுதிரையின்வாய்நீர் ௪0
இழுதுதானேநெய்யெனவிசைப்பர் ௪௧
இழுதையென்பதுபேதையாகும் ௪௨
இயைபேவாழையென்றிசைத்தனரே ௪௩
இளம்பிடியென்பதுபெண்பெயராகும் ௪௪
இறங்கரென்பதுகுடங்களின்பெயரே ௪௫
இறவுளர்தானேகுறவராகும் ௪௬
இறைஞ்சியென்பதுமரவுரியாகும் ௪௭
இன்னியர்தானேபாணராகும் ௪௮
இலங்கலென்பதுவேயொளிவிடலாகும் ௪௯
இரணியமும்பொன்னுமெனவிசைப்பர் ௫0
இம்மையென்பதிப்பிறப்பின்பெயர் ௫௧
இழிவுதானேதாழ்வெனலாகும் ௫௨
இளிவரலேவசைப்படுத்தலாகும் ௫௩
இண்டையென்பதுமாலையின்பேராம் ௫௪
இப்பரென்பதுசெட்டிகளாகும் ௫௫
இட்டிகையென்பதுசெங்கலின்பேரே ௫௬
இந்துளியென்பதுபெருங்காயப்பேர் ௫௭
இட்டியென்பதுவேவேள்வியாகும் ௫௮
இரேசகதானேதண்ணிமையாகும். ௫௯

இம்முதலொருபேர்க்கூற்றும்.

இம்முதலிருபெயர்

இரவியேமலேசூரியனிருபேர் ௬௦
இலனேசரியோரியென்றிருபெயர் ௬௧
இருளையென்பதுசட்புந்தோழியும் ௬௨
இக்கேகரும்பொடுகள்ளெனவிருபேர் ௬௩
இசுருவேபுளியம்புக்கட்டே ௬௪
இஞ்சியென்பதுவேயிஞ்சியும்மதிலும் ௬௫
இடக்கரேசூடமறைத்துச்சொல்லிருபேர் ௬௬
இணரேபூங்கொத்தொடுபூவிருபெயர் ௬௭
இதலேசிவலுங்கவுதாரியுமாம் ௬௮
இறியென்பதுபேயிறுதியென்றிருபெயர் ௬௯
இமிழேயினிமையுமிசையுமென்றிருபேர் ௭௦
இயறலென்பதுமுத்தியும்போதலும் ௭௧
இராடமேயொருதேசமுங்காழ்ந்தயும் ௭௨
இகரமென்பதோரெழுத்துஞ்சந்திரனும் ௭௩
இரவுதானேயிரக்கமுமிரவும் ௭௪
இரதனென்பதுகண்ணெண்டுமிளிரே ௭௫
இருரியேமரக்கலமும்வழக்கும் ௭௬
இருசென்பதுவேபண்டியுளிரும்பும்
செவ்வையுமெனவேதெரிக்குமிருபெயர் ௭௭
இலம்பகமேநுதல்மேலணிமாலையும்
அத்தியாயமுமாமிருபெயரே ௭௮
இலம்பாடென்பது துக்கமும்வறுமையும் ௭௯
இலவமென்பதோர்மரமும்பூளையும் ௮௦
இலங்கையென்பதுவேயாற்றிடைக்குறையும்
இலங்கையுமென்றேயிசைக்குமிருபெயர் ௮௧
இலபமென்பதுசுத்தின்விகற்பமும்
சுத்தமெனவேசாற்றுமிருபெயர் ௮௨

இறவைதானேயேணியுப்புட்டிலும் ௮௩
இலாடமேயோர்தேசமும்நெற்றியும் ௮௪
இளகல்தானேயழுங்கலும்வாரமும் ௮௫
இருவியேநினைத்தாளுமிருவியும் ௮௬
இராசியமென்பதுமறைவும்யோனியும் ௮௭
இறப்பேமிகுதிபோக்கெனவிருபெயர் ௮௮
இவறல்தானேயாசையுமறவியும் ௮௯
இழுமெனலென்பதொலியுமினிமையும் ௯0
இனமேகிளையுமமைச்சுமிருபெயர் ௯௧
இலாங்கலியென்பதுநாளிகேரமும்
செங்காந்தளுமெனவிருபேர்செப்பும் ௯௨
இளமையென்பதுதண்மையுங்காகமும் ௯௩
இலங்கல்தானேயழுங்கலுமார்வமும் ௯௪
இடைதலென்பதிடைதலும்புடவியும் ௯௫
இருமைதானேயிம்மையுமறுமையும்
பெருமையுமென்றேபேசுமிருபெயர் ௯௬
இறவுதானேயிறக்கமுமிரவும் ௯௭
இடித்தலென்பதுறுதிக்கட்டுரை ௯௮
இடித்தலுமென்றேயிசைக்குமிருபெயர் ௯௯
இரும்புதானேபொன்னுமிரும்புமாம்
இளைத்தலென்பதுவேயிளைத்தலுமிரங்கலும் ௧00
இறலேபெறலுமிறலுமென்றிருபேர் ௧0௧
இயம்பலென்பதுபழிமொழியுடனே
சொல்லுமெனவேதொடுக்குமிருபேர் ௧0௨
இன்னடையென்பதுமலையும்வணசமும் ௧0௩

இம்முதலிருபேர்முற்றும்.

## இம்முதன்மூப்பெயர்

இடங்கரென்பதுமுதலையுந்தூர்த்தரும்
குடங்கரெனவுங்கூறுமுப்பெயரே ௧௦௪

இதழேயுதடும்பூவினிதழும்
பனையேடெனவும்பகருமுப்பேரே ௧௦௫

இதையேகலப்பையுமரக்கலப்பாயும்
புதுப்புனமெனவும்புகலுமுப்பெயரே ௧௦௬

இந்தென்பதுவேகாடியுங்கரியும்
சந்திரனெனவுந்தருமுப்பெயரே ௧௦௭

இலகலென்பதுவேயகிலுமெழுத்தும்
நொய்மையுமெனவேநவலுமுப்பேரே ௧௦௮

இமையேகண்ணினிமையுக்காடியும்
மயிலுமெனவேவகுக்குமுப்பெயரே ௧௦௯

இம்பியென்பதுபொய்ம்மையும்புலனும்
நன்மையெனவுநவலுமுப்பேரே ௧௧௦

இபவேவழிகாடேரெனமூன்றும் ௧௧௧

இரலையேமுதனுளுக்கலையும்
ஊதிடுங்கொம்புமென்றேதுமுப்பேரே ௧௧௨

இழையென்பதுவேயிழைதலுநூலும்
ஆபரணமுமெனவாம்பெயர்மூன்றே ௧௧௩

இபமேமரத்தின்கோடுமியம்பலும்
ஆனையுமென்றேயறையுமுப்பேரே ௧௧௪

இகலேபகைவலிபோரெனமூன்றே ௧௧௫

இருபிறப்பென்பதுபறவைபார்ப்பு
எயிறெனமுப்பேரிசைக்கவும்படுமே ௧௧௬

இறத்தல்தானேகடத்தலுமிகுதியும்
சாதலுமென்றேசாற்றுமுப்பெயரே. ௧௧௭

இறுத்தலென்பதுசெப்பலுந்தங்கலும்
இறுத்தலெனவுமிசைக்குமுப்பெயரே ௧௧௮

இம்முதன்மூப்பேர்முற்றும்.

இம்முதல்நாற்பெயர்

இகத்தலென்பதுபுடைத்தலுங்கடத்தலும்
நெருக்கமுங்காழ்த்தலுமிகழ்த்தனாற்பெயரே ௧௧௯

இளையேயிருமேதியுங்கன்னிணையும்
பனிச்சையுமொப்பும்பகருநாற்பேரே ௧௨0

இரதமேபரைநாறுஞ்சூதமும்
பொற்றேருடனின்சுவையுநாற்பேரே ௧௨௧

இயமென்பதுவேயியுமோசையும்
வார்த்தையும்வாச்சியமொடுநாற்பேரே ௧௨௨

இரதியென்பதுபித்தளையாசை
மதனன்றேவிபெண்ணிணைநாற்பேரே ௧௨௩

இழைத்தலென்பதுகூத்தமுமாற்றமும்
ஆர்த்தலுமினைத்தலுமாகுநாற்பேரே ௧௨௪

இளியேயிசையுமிசித்தலுமுரித்தலும்
இழுங்குகலெனவுமிசைக்குநாற்பேரே ௧௨௫

இச்சையென்பதிடித்தலுமாசையும்
அஞ்ஞானமும்பொய்த்தலுநாற்பேரே ௧௨௬

இந்தனமென்பதுபுகையுமிசையும்
எரியிடுகல்லும்விறகுநாற்பேரே ௧௨௭

இராகமேநிறமிச்சைசெம்மை
கீதமெனவேகிளக்குநாற்பெயரே ௧௨௮

இருளேநிரயங்கருப்புமையல்
யானையெனவேயறையுநாற்பெயரே ௧௨௯

இடமேசெல்வம்விசாலமிடப்புறம்
இடமெனநாற்பேரிசைக்குமதற்கே ௧௩0

இறுலென்பதுகார்த்திகைநாளோர்மீன்
எறுடன்றேன்கூடென்னுநாற்பெயரே ௧௩௧

இயலேசாயலுநடையுந்தமிழும்
இயலுமெனவேயிசைத்திடுநாற்பேர் ௧௩௨

இம்முதல்நாற்பேர்முற்றும்.

### இம்முதலைம்பெயர்

இரணமேபொன்பூசல்மாணிக்கம்
அரவொடுகடலெனவைந்தாகும்மே ௧௰௩
இடையேயானைநடுநிறையிடமொடு
நசைப்புமெனவேநவலுமைம்பேரே ௧௰௪
இடியேயென்மாவுறுதிச்சொல்லிடி
தகர்சுண்ணமென்னத்தருமைம்பேரே ௧௰௫
இவர்தலென்பதுமேவலுஞ்சேறலும்
எழுச்சியுமாசையோடேலுதலைம்பேர் ௧௰௬
இவர்வென்பதுவேசேறலுமேறலும்
எழுதலுஞ்செலுத்தலும்விருப்பலுமைந்தே ௧௰௭

இம்முதலைம்பேர்முற்றும்.

### இம்முதலறுபெயர்

இல்லையிடமனைசாவொடுமனைவி
யில்லையிராசியெனுட்பெயராறே ௧௰௮
இறும்பென்பதுவேவியப்புந்தகைமையும்
மலையுங்குறுங்காடேனேறும்
வனசத்தலருமதிக்குமறுபெயர் ௧௰௯

இம்முதலறுபேர்முற்றும்.

### இம்முதலெழுபெயர்

இலஞ்சியென்பதுகுணமுமதிலும்
புனர்குமாமரமும்வகுளமுங்குளமும்
கொப்பூழெனவுங்கூறுமேழ்பெயரே ௧௪0
இசையென்பதுவேகிளவியும்பாட்டும்
வண்மையுமிசைப்பும்பணமுந்திசையும்
கித்திப்யெனவுஞ்செப்புமேழ்பெயரே ௧௪௧

இம்முதலேழ்பேர்முற்றும்.

இம்முதலெண்பெயர்

இலையேபூமியும்புயனும்பசவும்
இளமையும்வேலியுங்கிடங்குமங்காடியும்
காவற்காடுங்கருதுமெண்பெயரே ௧௪௨

இறம்பூதென்பதுமலையுந்தகைமையும்
வண்டுங்குழையுந்தாமரைப்பூவும்
அதிசயமுடனுங்காந்தட்பூவும்
சிறுதூறெனவுஞ்செப்புமெண்பெயரே ௧௪௩

இறுத்தலென்பதுசெருத்தலும்விழ்த்தலும்
ஈதலுமிழைத்தலுமிரிதலுந்துடைத்தலும்
வருந்துவித்தலுந்தாழ்த்தலுமெண்பேர் ௧௪௪

இம்முதலெண்பேர்முற்றும்.

இம்முதற்பதினொருபெயர்

இறையேகடனுஞ்சிறுமையுந்தங்கலும்
வீட்டினிறப்புஞ்சிவனுஞ்சென்னியும்
இறையிறுப்புடன்புட்சிறகுமன்னனும்
உயர்ந்தோருங்கையிலேறையும்பன்னோர்பேர் ௧௪௫

இம்முதற்பதினொருபேர்முற்றும்

இம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம் ௪௭௯.

ஈமுதலொருபெயர்

ஈர்ங்கையென்பதுகொடுங்கையென்றனர் ௧
ஈங்கைதானேயீங்கைச்செடியாம் ௨
ஈகமேசந்தனமெனப்பகர்வர் ௩
ஈமவனமேசுடுகாடாகும் ௪
ஈரவினென்பதுசந்திரனாகும் ௫
ஈரிலைதானேசூரியனென்றுமே ௬

ஈயுவனென்பதிராவணன்பேரே ௭
ஈறிலிதானேதெய்வமென்றாகும் ௮
ஈனமென்பதுவெள்ளியின்பேரே ௯
ஈர்வாளென்பதீரிவாட்பேர் ௧0
ஈசானந்தான்வடகீழ்த்திசையாம் ௧௧

ஈமுதலொருபேர்முற்றும்.

ஈமுதலிருபெயர்

ஈறேமுடிவும்பபறுமிருபெயர் ௧௨
ஈமமென்பதுமயானமும்விறகும் ௧௩
ஈரேகதுபபுமீருமாகும் ௧௪
ஈசனென்பதுமிதாவும்பிரமனும் ௧௫
ஈன்றானென்பதுபிதாவும்பிரமனும் ௧௬
ஈயென்பதுவேகொடுத்திடென்றலும்
ஓர்பறவையுமெனவுரைக்குமிருபெயர் ௧௭

ஈமுதலிருபேர்முற்றும்.

ஈமுதல்முப்பெயர்.

ஈழமென்பதோர்தேசமுங்கள்ளும்
பொன்னுமெனவேபுகலுமுப்பேரே ௧௮
ஈண்டென்பதுவேயிவ்விடஞ்சடுதி
யிப்படியெனவுமுப்பெயராகும் ௧௯
ஈனமென்பதுமுயலுஞ்சரிவும்
இழிவுமென்றேயியம்புமுப்பேரே ௨0

ஈமுதல்முப்பேர்முற்றும்.

ஈமுதல்நாற்பெயர்

ஈடேகுறையும்வலியுமொப்பும்
பெருமையுமெனவேபேசுநாற்பேரே ௨௧

ஈமுதல்நாற்பேர்முற்றும்.

ஈமுதலைம்பெயர்

ஈரமென்பதுகுளிர்ச்சியுமன்பும்
வனப்பும்பகுதியுமறிவுமென்றைம்பேர் ௨௨

ஈமுதலைம்பேர்முற்றும்.

ஈமுதலறுபெயர்

ஈகையென்பதுகொடையுங்காற்றும்
இல்லாமையுங்கற்பகமுங்கனகமோ
டிண்டுமெனவேயிசைக்குமறுபேர் ௨௩

ஈமுதலறுபேர்முற்றும்.

ஈமுதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆகச்சூத்திரம் ௫௦௨.

உம்முதலொருபெயர்

உசினமென்பதுபுளிமாவாகும் ௧
உரகமேபன்னகமெனப்படுமே ௨
உள்குதலுமேநினைத்தலாகும் ௩
உதகமேநீராகுமென்ப ௪
உதளென்பதுவெள்ளாட்டேற்றின்பேர் ௫
உத்தரீகந்தானேகாசப்பெயர் ௬
உபநிடதமென்பதுவேதமாகும் ௭
உப்பக்கந்தான்முதுகெனலாகும் ௮
உருப்பமென்பதுவெப்பத்தின்பெயர் ௯
உமணரென்பதுவேயுப்புவாணியராம் ௧௦
உசிதனேபாண்டியனெனவுரைப்பர் ௧௧
உள்ளானென்பதோர்குருவிப்பேர் ௧௨
உம்மையென்றல்கழிபிறப்பாகும் ௧௩
உயர்நிலையென்பதேவருலகே ௧௪
உறுவாரமென்பதுவெள்ளியாகும் ௧௫

உயக்கல்தானேவருந்தலாகும் கசு
உரண்டமென்பதுகாக்கையின்பேரே கஎ
உருளரிசியென்பதுகொத்தமலியே கஅ
உட்பிடிதானேகைவேலாகும் ககூ
உழுந்தேபயற்றிலொன்றெனப்படுமே உ0
உலூகர்தானேயுரலெனப்படுமே உக
உல்லிதானேமதிலெனவுரைப்பர் உஉ
உல்லரியென்பதுதளிரெனலாகும் உங
உவரகந்தானேகளர்மண்ணெனுமே உச
உவரியென்பதுகடலெனப்படுமே உரு
உழத்தல்தானேயழித்தலாகும் உசு
உளியமென்பதுகரடியாகும் உஎ
உளியேதச்சர்களாயுதமெனுமே உஅ
உள்ளாளமென்பதுகூத்தின்பெயராம் உகூ
உய்யானமென்பதுசோலையாகும் ஙo
உத்தமேபித்தேறலெனப்படும் ஙக
உருக்கலேகோபித்தலாகும் ஙஉ
உலவல்தானேதுறந்தோர்பெயரே ஙங
உறையல்தானேபிணக்கெனவுரைப்பர் ஙச
உல்லமென்பதொருமீனாகும் ஙரு
உற்பலமேசெங்கழுநீராகும் ஙசு
உன்னமென்பதுவேயன்னமென்புள்ளாம் ஙஎ
உன்னதமென்பதுயர்ச்சியின்பெயராம் ஙஅ
உற்றார்தானேசுற்றமெனப்படும் ஙகூ

உம்முதலொருபேர்முற்றும்.